திருவாவடுதுறை ஆதீனம்

பதினெட்டாவது

# திருமந்திர மாநாட்டு மலர்



## திருமந்திரம்

[எட்டாந்தந்திரம் நான்காம்பகுதி]



சாதாரண - தை
1971

ஸ்ரீ நமசிவாயமூர்த்தி அச்சகம்
— திருவாவடுதுறை —

வெளியீடு எண் 259.

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்

# திருமூலர் திருமந்திரம்

## எட்டாந்தந்திரம் - நான்காம்பகுதி

[உரையுடன்]

இது

திருக்கயிலாய பரம்பரைத் திருவாவடுதுறை ஆதீனத்து
இருபத்திரண்டாவது குருமகாசந்நிதானம்
**ஸ்ரீ-ல-ஸ்ரீ அம்பலவாணதேசிக சுவாமிகள்**
கட்டளையிட்டருளியபடி
வெளியிடப்பெற்றது

திருவாவடுதுறை ஆதீனம்

1971

உ

## குருமரபு வாழ்த்து

கயிலாய பரம்பரையிற் சிவஞான
　　போதநெறி காட்டும் வெண்ணெய்
பயில்வாய்மை மெய்கண்டான் சந்ததிக்கோர்
　　மெய்ஞ்ஞான பாநு வாகிக்
குயிலாரும் பொழிற்றிருவா வடுதுறைவாழ்
　　குருநமச்சி வாய தேவன்
சயிலாதி மரபுடையோன் திருமரபு
　　நீடூழி தழைக மாதோ.

— ஸ்ரீ மாதவச்சிவஞானயோகிகள்.



ஸ்ரீ நமசிவாயமூர்த்திகள்

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

# முகவுரை

"சிவமான ஞானந் தெளியவொண் சித்தி
சிவமான ஞானந் தெளியவொண் முத்தி
சிவமான ஞானஞ் சிவபரத்தே யேகச்
சிவமான ஞானஞ் சிவானந்த நல்குமே."

'திருமந்திரமாலை' என்பது சைவத் திருமுறைகள் பன்னிரண்டனுள் பத்தாந் திருமுறையாகும். இதனை நமக்கு அருளிய அருளாளர், "ஆவடுதண் டுறையணைந்தங் கரும்பொருளை யுறவணங்கி, மேவுவார் புறக்குடபான் மிக்குயர்ந்தஅரசின்கீழ்த், தேவிருக்கையமர்ந்தருளிச் சிவ யோகந் தலைநின்று, பூவலரு மிதயத்துப் பொருளோடும் புணர்ந்திருந்த" திருமூலதேவநாயனார். அந்த நாயனார், "ஊனுடம்பிற் பிறவி விடந் தீர்ந்துலகத் தோருய்ய, ஞானமுத லுன்குமலர் நற்றிருமந் திரமாலை, பான்மை முறை யோராண்டுக் கொன்றாகப் பரம்பொருளாம், ஏனவெயி றணிந்தாரை 'யொன்றவன்றா' னெனவெடுத்து" "முன்னியவப் பொருண்மாலைத் தமிழ் மூவா யிரஞ்சாத்தி, மன்னியமூ வாயிரத்தாண் டிப்புவிமேன் மகிழ்ந்திருந்து, சென்னிமதி யணிந்தார்தந் திருவருளாற் றிருக்கயிலை, தன்னிலணைந் தொருகாலும் பிரியாமைத் தாளடைந்தார்." ஆகிய பேரருளாளர் ஆவார்.

"நான்பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்" என்று திருவுள்ளத்திலே மூண்டெழுந்த திருவருட் பெருக்கால்,

"தண்ணிலவார் சடையார்தாம் தந்தவா கமப்பொருளை, மண்ணின்மிசைத் திருமூலர் வாக்கினுல் தமிழ்வகுப்பக், கண்ணியவத் திருவருளா லவ்வுடலைக் கரப்பிக்க, எண்ணி றைந்த வுணர்வுடையார் ஈசரரு ளெனவுணர்ந்தார்" ஆகலின், 'தமிழ் மூவாயிரமும் திருமந்திர மாலையாகச் சாத்தினுர்' எனத் தெய்வச் சேக்கிழார் சுவாமிகள் கூறுதலின் இந்நூல் திருமந்திரமாலை என்று அன்று தொட்டே வழங்கப்பெறுதல் ஒருதலையாம்.

இத்திருமந்திரமாலையில் மூவாயிரந்தமிழ் எனக் கூறி யிருக்கச் சில பாடல்கள் அதிகமாகக் காணப்பெறுகின் றன. பிரதிகளில் 3047 உள்ளன; பிற நூல்களிலும் உரைகளிலும் காணப்படுவன 11 செய்யுட்கள். மேலும் அதிகமாகவுள்ளன என்பார் சிலர். ஆயினும், சேக்கிழார் சுவாமிகள் அருளியதே அடிப்படைக் கருத்தாம் என்க.

" தேவர் குறளுந் திருநான் மறைமுடிவும்
மூவர் தமிழும் முனிமொழியுங் — கோவை
திருவா சகமும் திருமூலர் சொல்லும்
ஒருவா சகமென் றுணர்"

என்னும் வாக்கால் மேலே காணப்பெறும் நூல்களெல் லாம் ஒரு பரம்பொருளையே உணர்த்துவனவாம் என அறியக்கிடப்பதாம். திருமூலர் சொல்லாகிய திருமந்திர மாலையை இத்திருவாவடுதுறை ஆதீனத்திலே 1959-ம் ஆண்டு தொடங்கிப் பாயிரம் முதலாக ஸ்ரீ பஞ்சாட்சர தீபம் என்னும் உரையுடன் வெளியிடப்பெற்றுவருவதை யாவருமறிவர்.

1952 ஆம் ஆண்டிலே திருமந்திர சிந்தனை என்னும் ஒரு பாடலின் பழையவுரையொன்று கிடைத்து அதனை 'நவாக்கரி சக்கரம்' மூலத்துடன் வெளியிட்டேன். பின்பு 1954ஆம் ஆண்டிலே திருமந்திரமாநாட்டிலே திருமந் திரம் 102 பாடல்களுக்குக் கிடைத்த கயிலாய சித்தர்

உரை வெளிவந்தது. 1955 ஆம் ஆண்டில் நடைபெற்ற மாநாட்டில் 'சிவயோகப் பகுதி' உரை விளக்கம் வெளியிடப்பெற்றது. 1956ல் நடைபெற்ற மூன்றுந் திருமந்திரமாநாட்டில் 'சிவயோக சிந்தனை' என்னும் பகுதியொன்று வெளிவந்தது. அதனைத் தொடர்ந்து ஆண்டுகள்தோறும் நடைபெறும் மாநாடுகளில்தொடர்ச்சியாக மேலே கூறிய பஞ்சாக்ஷரதீபம் என்னும் உரை வெளிவந்துகொண்டேயிருக்கின்றது. 1968 ஆம் ஆண்டில் திருமந்திரம் எட்டாந்தந்திரத்தின் முதற்பகுதி 247 பாடல்களுக்கு உரையுடன் ஒரு புத்தகமாக வெளிவந்தது. அதன்பின் 1969ல் பதினாறுவது திருமந்திரமாநாட்டில் தொடர்ந்து இரண்டாம் பகுதியாக ஆறந்தம் - 35, பதி பசு பாசம் வேறின்மை - 20 ஆக 55 மந்திரங்களுக்கு உரை வெளிவந்தது. 1970 ஆம் ஆண்டு பதினேழாவது திருமந்திரமாநாட்டில் எட்டாம் தந்திரத்து மூன்றும் பகுதியாக 41 - மந்திரங்களுக்கு உரையெழுதி வெளியிடப்பெற்றது.

1971 ஆம் ஆண்டு பதினெட்டாவது திருமந்திர மாநாட்டில் எட்டாந் தந்திரத்து நான்காம் பகுதியாக 22. முத்துரியம், 23. மும்முத்தி, 24. முச்சொரூபம், 25. முக்கரணம், 26. முச்சூனிய தொந்தத்தசி, 27. முப்பாழ் என்னும் 6 தலைப்புகளில் உள்ள 35 மந்திரங்கள் மட்டும் உரையுடன் வெளிவருகிறது.

இதன்கண் ஆராயப்படுவன 35 மந்திரங்கள் ஆயினும் முன்னும்பின்னும் சிங்கநோக்காகவைத்து ஆராயும் பகுதிகள் பலவுள. எட்டாந்தந்திரம் முதற்பகுதியுள் உள்ள பராவத்தை, நின்மலாவத்தைகளைப் பலமுறை நன்கு கற்று ஆராய்ந்து தெளியவேண்டும். பின்பு கேவல சகல சுத்த நிலைகளையும் உடன்வைத்து ஆராய்தல் மிக இன்றியமையாதன என்பது விளங்கும். ஆன்ம தரிசனம்

ஆன்மசுத்திகள், சிவரூபம் சிவ தரிசனம் என்பனயாவை? அவைகளை அடைதற்குரிய சாதனங்கள் யாவை என அறிந்து மேற்கொள்ளுதலும் வேண்டும். முப்பரம், பர லட்சணம் முதலியன அறிந்து விளங்கிக்கொள்ளுதலால் மேலே கூறும் விஷயங்களை அறிதல் ஒருவாறு கூடும். பத்திரிகைச் செய்திகள் போல அங்கங்கே தொட்டு விட்டுவிடுதல் ஞானநூல் பயில்வாருக்கு ஒல்லாது.

சிலர் திருமந்திரப் பாடல்களுக்கு விளக்கமாகச் சிவஞானபோதம் முதலிய ஞான சாத்திரங்களில் உள்ள பகுதிகளை இதன்கண் எடுத்துக் காட்டியிருப்பது போல நாமும் சிலசில பகுதிகளை ஒன்றுசேர்த்து ஒரு நூலோ, உரையோ செய்யலாமே ! இஃது ஓர் பிரமாதமன்று என எண்ணுதல்கூடும், வாய்ப்பறை சாற்றுதலும் கூடும்; செயலாற்றும்போதுதான் தம் அறிவு இத்தகையநிலையில் உள்ளதென விளங்கும். அத்தகையோர் 'குன்று முட்டிய குரீஇப் போல்' இடர்ப் படுதலைப் பல இடங்களில் காணலாம் என்பதை அறிஞர் அறிவர்.

இப்பகுதிகள் யாவும் நின்மல துரிய துரியாதீத நிலைகளைக் குறிப்பன ஆகலின், பதவுரையோ கருத்துரையோ சொல்லிக்கொண்டு சென்று பக்கம் பெருக்க முடியாத பகுதிகளாக இருத்தலின் அவற்றை மெல்ல மெல்ல என் சிற்றறிவிலே கொண்டு செலுத்துதல் கூடாமையை நன்கு அறிந்து, குருவருளும் திருவருளும் என் அறிவின்கண் இருந்து செலுத்த எனக்குப் புலப்பட்ட வகையில் இவ்வுரையை எழுதினேன். இந்தப்பகுதிகளெல்லாம் தூய அந்தக்கரணங்களையும், தூய அறிவையும் பெற்றுச் சிந்திக்கத் தக்கனவேயன்றிக் கருவிநூல் துணைகொண்டு எழுதும் அறிவுக்கு அப்பாற்பட்டன என்பதை நன்கறிந்தேன். எனினும், ஒருவாறு ஸ்ரீ மாதவச் சிவஞானயோகிகள் அருளிச்செய்த சிவஞானபோத

மாபாடியமும், சிவஞானசித்தியார் பொழிப்புரையும் துணையாக எழுதி முடித்தேன். இப்பகுதிகளில் சிந்தித்து உணரத்தக்க செய்திகள் மிகப் பல. அனுபூதியில் உறைத்துநின்று அறியத்தக்கனவும் பல. அவ்வாருக, இவ்வுரையை எழுதுதற்குக் காரணம் என் அறியாமையைப்புலப்படுத்திச் சிவஞானிகள்பால் நல்லன ஏதேனும் பெற்றுய்யலாம் என்ற கருத்தேயாம். இப்பகுதிகளுக்கு இதனினும் சிறந்த உரை வெளிப்படுவதற்கு இதுவும் ஒரு பெருங்காரணமாம் என்க. இனி,

> துரியங் கடந்தஇத் தொண்டர்க்குச் சாக்கிரம்
> துரியமாய் நின்றதென் றுந்தீபற
> துறந்தார் அவர்களென் றுந்தீபற. (32)

என்பது திருவுந்தியார்.

முன்னைத் துரியம் தற்போதம்; பின்னைத்துரியம் பரபோகம். சகல தத்துவங்களையும் கடந்தவிடத்து நிற்பது தற்போதமேயாகலான் அதனைத்துரியமென்ருர். அஃதாவது ஞானுசாரியர் உபதேசித்த வழியே சகல தத்துவங்களையும் தத்துவரூபம், தத்துவதரிசனம் என்னும் முறையால் கண்டு சுத்தியாக்கிய பின்னர் நின்றது தற்போதம் ஒன்றே யாகலான் அதனைத் துரியம் எனவும், அப்போதம் ஆன்மரூபம் ஆன்மதரிசனம் என்னும் முறையால் ஆன்மாவைக் கண்டபின்னர் ஆன்மா அன்பின் வசப்பட்டுச் சுத்தியாம் ஆகலான், இவர்கள் பின்னர்த் தத்துவங்களோடு கூடிச்செய்யும் செயலெல்லாம் இவர்களது அன்பே உருவாகிய சிவன் செயலாமேயன்றி இவர்கள் செயல் சிறிதுமின்ருகவே இத்தொண்டர்க்குச் 'சாக்கிரம் துரியமாய் நின்ற' தெனவும், தத்துவரூபம் தத்துவ தரிசனங்களால் தத்துவ சுத்தியையும், ஆன்மரூபம் ஆன்மதரிசனங்களால் ஆன்ம

சுத்தியாகிய தற்போத சுத்தியும் பெறப்பெற்ற இவர்களே மெய்த்துறவிகள் ஆகலான் 'துறந்தார் அவர்கள்' எனவும் கூறியமை காண்க.

அவர்கள் துறந்தார் என்றதனுல், இம்முறை அறியாதார் தத்துவங்களைத் துறந்தவர்களுமல்லர்; தற்போதத்தை நீங்கினவருமல்லர் என்க. இதனுல் துறத்தல் என்பது சுத்தி எனப்பட்டது. அஃதாவது, முன்னர் தத்துவங்கள் இன்னதெனத்தெரியவந்து, அதன்பின்னர் அவற்றின் உண்மை இதுவாம் என்று உணர்ந்து, அதன் பின்னர் சிவபெருமான் திருவருளால் அவற்றினின்றும் ஆன்மா வேறுபடுதலாம். இதுபோலவே தற்போத சுத்தியாகிய ஆன்மசுத்தியாவது ஆணவமல மறைப்பினின்று நீங்கி, ஆன்மாவை ஞானமாகக்கண்டு பின்னர் போதமும் போதச்செயலும் அற்றிருப்பதாகிய நிலையினை யுணர்ந்து அந்த நிலையில் அப்பொருளேயாய்ப்போதம் தோன்ருத இடமாம்.

தத்துவரூபாதிகளை, ''மண்முதற் சிவம தீருய் வடிவு காண் பதுவே ரூபம், மண்முதற் சிவம தீருய் மலஞ்சட மென்றல் காட்சி, மண்முதற் சிவமதீருய் வகையதிற் ருனி லாது, கண்ணுத லருளால் நீங்கல் சுத்தியாய்க் கருத லாமே'' எனவும்,

ஆன்மரூபாதிகளை, ''பாயிருள் நீங்கி ஞானந் தனைக் காண்டல் ஆன்மரூபம், நீயுநின் செயலொன் றின்றி நிற்பதே தரிச னந்தான், போயிவன் தன்மை கெட்டுப் பொருளிற்போய் அங்குத் தோன்ரு(து), ஆயிடல் ஆன்ம சுத்தி அருள்நூலின் விதித்த வாறே'' எனவும் வரும் உண்மைநெறி விளக்கத்தாற் கண்டு தெளிக.

இனி, சீவசாக்கிராதி அவஸ்தாத்திரயங்களைக் கடந்த ஞானசொரூபமாய் விளங்கும் சிற்சத்தியுடன் எப்பொழுதும் நீங்காது தாதான்மியமாய் நிற்கிற சிவபெருமான்,

தம்பால் நிகழும் அருட்செயலைத் தம் செயலாகக் கொள்ளாத அன்பர்களுக்கு சிவதுரியநிலையில் நிகழும் தமது செயலை, புருவமத்தியிலே முப்பத்தாறு தத்துவங் களும் ஒருங்கே கூடித் தொழில் புரிதலாகிய சீவசாக் கிரத்தைப் பொருந்தியிருக்கின்ற அந்நிலையில் செய் தருளி, அச்செயல்களைத் தாம் செய்ததாக வெளிப் படுத்தாமல், அவர்கள் செய்ததாகவே ஆக்கிவிடுவார் என்பதாம்.

இதனுல், சிவபெருமான் தனது அன்பர்கள் சாக்கிரா வத்தையைப் பொருந்துவராயின் அதனைச் சீவசாக்கிர மாக்காது தமது சிவசாக்கிரமாக ஆக்குவார் என்றும், சீவசாக்கிரத்துக்குரிய தத்துவங்களோடுகூடி அவ்வன்பர் கள் செய்யும் செய்கைகளெல்லாம் தாம் செய்யும் அருட் செயலாகச் செய்வர் என்றும், பின்னர் தமது அருட் செயலாகிய அச்செயல்களை அவர்கள் செய்த செயல்க ளாகவே யாவராலும் சொல்லும்வண்ணம் செய்வர் என்றும் அறிக.

எனவே, சிவஞானிகள் இறைவன் தம்மிடத்து நிகழ்த்தும் செயல்களைத் தம்முடையதாகக் கொள்ளாது இறைவனுடைய செயல்களாகவே கொள்ளும் ஞானத் திறத்தை நோக்கி அவ்விறைவனும் அவர்கள்பால் தமக் கிருக்கும் அன்பின் திறத்தை யாவரும் அறிய அவர்கள் பால்நின்று தாம் செய்யும் அருட்செயல்களெல்லாம் அவர்கள்பாலே ஆக்கி அவர்களுக்கே புகழைத்தருவன் என்பதறிக. இதனை, திருஞானசம்பந்தமூர்த்தி நாய ஞர், திருநாவுக்கரசு நாயனுர், சுந்தரமூர்த்தி நாயனுர், மாணிக்கவாசகசுவாமிகள் முதலியோர் அற்புத நிகழ்ச்சி களில் வைத்துக் காண்க. இனி,

"பெருந்துறையிற் சிவபெருமா னருளுதலும் பெருங்கருணைப் பெற்றி நோக்கிக், கரைந்துகரைந்

திருகண்ணீர் மழைவாரத் துரியநிலை கடந்து போந்து, திருந்துபெருஞ் சிவபோகக் கொழுந்தேறல் வாய்மடுத்துத் தேக்கிச் செம்மாந், திருந்தருளும் பெருங்கீர்த்தி வாதவூ ரடிகளடி யிணைகள் போற்றி.'' எனவரும் ஸ்ரீ மாதவச் சிவஞானயோகிகள் வாக்கானுமுணர்க.

சைவநன்மக்கள் யாவரும் சித்தாந்த சைவசமய நெறியுடையராய், தவவொழுக்கமுள்ளவராய், சிவஞானமுற்று வாழவேண்டும் எனவும், திருமந்திர அனுபவம் கைவரவேண்டுமெனவும் திருவுளங்கொண்டு சிவஞான ராசதானியாக விளங்கும் இத்திருவாவடுதுறையிலே ஆண்டுகள்தோறும் திருமந்திர மாநாடுகளைக் கூட்டியும்; திருவெண்ணெய் நல்லூரிலே சித்தாந்தசைவ மாநாடு கூட்டி மக்களை நல்வழிப்படச் செய்வித்தும் சிவக்ஷேத்திர குருக்ஷேத்திர பரிபாலனமும் சைவபரிபாலனமும் செய்து வருவதுடன் செந்தண்டமிழ் நூல்களையும் சிறந்த உரைகளையும் வெளிப்படுத்தித் தமிழ் தழைத்தோங்குமாறு பாலனம் செய்துவரும் இருபத்திரண்டாவது குருமகா சந்நிதானம் **ஸ்ரீ - ல - ஸ்ரீ அம்பலவாண தேசிக சுவாமிகள்** கட்டளையிட்டருளியபடி இவ்வுரை புதுவதாக என்னால் எழுதப்பெற்று ஸ்ரீ நமச்சிவாய மூர்த்தி அச்சகத்தில் அச்சிட்டு இன்று பதினெட்டாவது திருமந்திரமாநாட்டில் வெளியிடப்பெறுகிறது. குற்றமிருப்பின் பெரியோர் பொறுத்தருள்க.

இங்ஙனம்,

சித்தாந்தசைவமணி —

**த. ச. மீனாட்சிசுந்தரம்பிள்ளை,**

ஆதீன வித்துவான்.

திருவாவடுதுறை
18—1—71.



திருக்கயிலாய பரம்பரைத் திருவாவடுதுறை ஆதீனம்
இருபத்திரண்டாவது குருமகாசந்நிதானம்
ஸ்ரீ-ல-ஸ்ரீ அம்பலவாணதேசிக பரமாசாரிய சுவாமிகள்

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்

# திருமூலர் திருமந்திரம்

## ஸ்ரீ பஞ்சாட்சரதீபம் என்னும் உரையுடன்

---

## எட்டாந்தந்திரம்

### 22. முத்துரியம்

நனவாதி மூன்றினிற் சீவ துரியந்
தனதாதி மூன்றினிற் பரதுரி யந்தான்
நனவாதி மூன்றி னிற்சிவ துரியமா
மினதாகுந் தொந்தத் தசிபதத் தீடே. 2465

இதன்பொருள்: துரியம் மூன்று உள்ளன. அவை சீவதுரியம், பரதுரியம், சிவதுரியம் என்பனவாம். சீவதுரியம் நனவு கனவு உறக்கம் ஆம். துரியம் செயலற்றநிலை ஆகும். எல்லாவற்றிற்கும் நிமித்த காரணமாக விளங்கும் சிவபெருமானிடத்தும் மேலே கூறிய நனவு கனவு உறக்கம் முதலிய மூன்று நிலைகளும் உள்ளன. அவை தம்மைச்சார்ந்த ஆன்மாக்களின் பொருட்டாகவே உள; அவை சிவதுரியம் என்று சொல்லப்படும். இரண்டாவதாகக் கூறப்பட்ட பரதுரியமும் இந்த மூன்று வகைப்பட்ட நிலையினையுடையது. தனதாதி என்றது பராவத்தையில் நனவாதியை என்க. சிவதுரியம் ஆம் இ(ன்)னது தொம் தத் அசி பதத்து ஈடே ஆகும். ஈடு என்றது வியாபகத்தை. நீ அது ஆகின்றாய்=தொம் தத் அசி என்பது.

த்வம்=தொம் - நீ; தத் - அது; அசி-ஆகின்றாய் என்க. நனவு - சாக்கிரம். கனவு - சொப்பனம். உறக்கம் - சுழுத்தி. சிகார யகார வகாரங்கள் முறையே தற்பதப் பொருளும் துவம் பதப்பொருளும் அசிபதப் பொருளு மாம் என அறிக என்றவாறு. (344)

தானா நனவில் துரியந்தன் தொம்பதம்
தானாந் துரிய நனவாதி தான்மூன்றில்
ஆனாப் பரபத மற்றது அருநனா
வானான மேன்மூன்றுந் துரியம் அணுகுமே. 2466

இ - ள்: தான் ஆம் நனவில் - சீவ அவத்தை யாகிய நனவின்கண், துரியம் தன் - பேருறக்கம் ஆகிய துரியத்து, தொம்பதம் - நீ என்னும் தொம்பதமாக நிற்குமாம், தான் ஆம் துரியம் - சீவ அவத்தையாகிய துரியத்திலே பேசப்படுகின்ற, நனவு ஆதி தான் மூன்றில் - நனவு கனவு சுழுத்தி என்னும் மூன்றில், ஆனா பரபதம் அற்றது - நீங்காத பராவத்தையின் முடிந்த இடமாகும், அரு நனா - அந்தப் பராவத்தை யின் முடிந்த இடமே அந்நிலைக்கு உரிய நனவு என்று சொல்லப்படும், வான் ஆன மேல் முத்துரியம் அணு கும் - சிறந்ததாகிய சிவாவத்தையில் சுழுத்தி துரியம் துரியாதீதம் முதலிய மூன்றும் வந்து பொருந்தும் என்றவாறு.

தான் ஆம் நனவு - சீவ அவத்தையாகிய நனவு. துரியம்- துரிய நிலை; அது பேருறக்கம். தொம்=த்வம்- நீ. தான் ஆம் துரியம்-சீவ அவத்தையிலுள்ள துரியம். பரபதம் அற்றது-பராவத்தையின் முடிந்த இடம். மேல் மூன்றும் - சிவாவத்தையின்கண் சுழுத்தி முதலிய மூன்றும். (345)

அணுவின் துரியத்து நான்கும தாகிப்
பணியும் பர துரி யம்பயி னுன்குந்
தணிவிற் பரமாகிச் சார்முத் துரியக்
கணுவிலிந் நான்குங் கலந்தவி ரைந்தே. 2467

இ - ள் : அணுவின் துரியத்து - அணு எனப் படும் சீவ துரியத்திலே, அது ஆகி பணியும் பர துரியம் - திருவருளேயாகிப் பணிசெய்யும் பர துரியத்திலே, பயில் நான்கும் - உண்டாகின்ற நான்கும், தணிவு இல் பரம் ஆகி சார் முத்துரியக் கணுவில் - நீங்காத மேம்பாடு உடையதாய்ப் பொருந்தும் சிவ துரியமாகிய பரம அவத்தையில் நிகழ்கின்ற துரியம் துரியாதீதம் என்னும் சேர்க்கையில், இ நான்கும் கலந்த ஈர் ஐந்து - கீழே சொல்லப்பட்ட சீவ துரியம் நான்கும் பர துரியம் நான்கு மாகிய இந்த எட்டுடன் கலப்புற்ற பத்தாகும் எ - று.

இ (ஈர்) நான்கும் கலந்த ஈர் ஐந்து என்க. அணு வின் துரியம் நான்கு. கணு - சேர்க்கை; இருபகுதி களும் கலந்த இடம். கணு: "கணுமுற்றி நின்ற கரும் புள்ளே காட்டி" (விநாயகரகவல்). நான்கு என்றது சாக்கிரம் சொப்பனம் சுழுத்தி துரியம் என்பனவற்றை. பரம் ஆகிச் சார்தலாவது பராவத்தையில் சாக்கிரம் சொப்பனம் சுழுத்தி என்பது; மேல் துரியம் துரியா தீதம் என்னும் இரண்டுமாம். எனவே சீவ துரியம் நான்கு, பர துரியம் நான்கு, பராவத்தையில் துரியம் துரியாதீதம் என்னும் இரண்டு; ஆகப் பத்து என்க. (346)

ஈரைந் தவத்தை யிசைமுத் துரியத்துள்
நேரந்த மாக நெறிவழி யேசென்று
பாரந்த மான பராபரத் தயிக்கியத்
தோரந்த மாமிரு பாதியைச் சேர்த்திடே. 2468

இ - ள் : ஈர் ஐந்து அவத்தை இசை முத்துரியத்துள் - பத்து அவத்தைகளைப் பொருந்திய சீவதுரியம், பரதுரியம், சிவதுரியம் என்று சொல்லப்படும் மூன்று துரியங்களுள், நேர் அந்தம் ஆக - திருவடிப் பேற்றினை அடையும்பொருட்டு, நெறிவழியேசென்று - சித்தாந்த சைவ நெறியின்கண் உபதேசமுறையாக அநுவத்திற் சென்றால், பார் அந்தம் ஆன பராபரத்து ஐக்கியத்து - இகத்தற்கரிய பெரிய முடிவான மேலானவற்றினும் மேலாகவுள்ள பரசிவத்தினோடு இரண்டறக் கலத்தலின்கண், இரு பாதியைச்சேர்த்திடு ஓர் அந்தம் ஆம் - இரண்டு கூறு எனச் சொல்லப்படும் சிவபெருமானுடைய திருவடியைக் கூட்டுவிக்கும் என்றவாறு.

ஈர் ஐந்து அவத்தை - பத்தவத்தை. அவை முன் மந்திரத்தில் சொல்லிய சீவதுரியம் நான்கு, பரதுரியம் நான்கு, சிவதுரியம் துரியாதீதம் என்பன. நேர் அந்தம் என்றது சிவப்பேற்றை; அது திருவடிப்பேறு எனவும் வழங்கும். நெறி - சித்தாந்த சைவநெறி. ஓர் அந்தம் - ஒப்பற்ற முடிவு. பார் அந்தம் என்றது நிலமுதலாகச் சொல்லப்பட்ட முப்பத்தாறு தத்துவங்களின் முடிவு; அது தத்துவாதீதம், தத்துவாதீதமான பராபரம். பராத் பரம்=பராபரம் - மேலானவற்றினும் மேலாகவுள்ளது. (347)

தொட்டே யிருமின் துரிய நிலத்தினை
எட்டா தெனினின் றெட்டும் இறைவனைப்
பட்டாங் கறிந்திடிற் பன்னு வுதடுகள்
தட்டா தொழிவதோர் தத்துவந் தானே. 2469

இ - ள் : துரிய நிலத்தினை தொட்டே இருமின் - துரிய பூமியை நீங்காமல் உணர்வில் உணர்ந்திருங்கள், எட்டாது எனின் - அந்நிலையினில் நில்லாதவருக்கு

எட்டாத தன்மையுடையதாயினும், (உணர்வார்க்கு அவர் உணர்வின்கண்) நின்று எட்டும் இறைவனை - நிலைபெற்று விளங்கும் அப்பரம்பொருளை, பட்டாங்கு அறிந்திடில் - உண்மையாகவே உணர்ந்திடின், பல் நா உதடுகள் தட்டாது ஒழிவது - பல்லும் நாவும் இதழ் களும் பிறவும் கூடிப் பிறக்கும் சுத்த மாயா காரிய மாகிய சொற்களுக்கு அகப்படாமல் நீங்கி நிற்பதாம் என்றவாறு.

இனி, "பிரபஞ்சத்திற்கு முதற்காரணமாய்ச் சட மாய் முதல்வனுக்குப் பரிக்கிரக சத்தியாய் முதல்வனின் வியாப்பியமாய் மெய்ப்பொருளாய் அருவாயுள்ளது மாயை; அது சுத்த மாயை அசுத்த மாயை என்று இருவகைப்படும். சுத்த மாயை, மாமாயை, குடிலை, குண்டலி, விந்து என்பன ஒரு பொருட்கிளவி. அசுத்த மாயை அதோமாயை மாயை மோகினி என்பன ஒரு பொருட்கிளவி. இவற்றுள், சுத்தப் பிரபஞ்சத்திற்கு முதற்காரணம் சுத்தமாயை; அசுத்தப் பிரபஞ்சத்திற்கு முதற்காரணம் அசுத்தமாயை. சுத்தப் பிரபஞ்சம் சிவ தத்துவம் முதலாயின. அசுத்தப் பிரபஞ்சம் கலை முத லாயின." சுத்தம் என்பது துன்பத்தோடு விரவுத லின்றி இன்ப மாத்திரையே பயத்தற்கு ஏதுவாயது. ஏனையது அசுத்தம் என்க.

"பெயர் சாதி முதலிய சவிகற்பவுணர்வு எழுத் தாகிய சொல்லானன்றிப் பெறப்படாது. ஆகலின், அவ்வெழுத்தோசைக்குக் காரணம் சுத்தமாயை. காரணம் இன்றிக் காரியந்தோன்ருது. எழுத்தோசை அநித்தம்."

" சத்ததன்மாத்திரையின் காரியமாகிய ஆகாயமே சத்தத்திற்கெல்லாம் காரணம் ஆயினும், எழுத்து

ஓசைக்கு வேறு காரணம் உண்டு. ஆகாயம் எழுத்தோசையைப் புலப்படுத்துவதாகிய இசையோசைக்கே காரணமாவதன்றி, அதனுற் புலப்படுவதாகிய எழுத்தோசைக்குக் காரணம் ஆகாதென்க. ஒளியும் உருவமும் போலப் புலப்படுப்பதும் புலப்படுவதுமாகிய இசையோசைக்கும் எழுத்தோசைக்கும் தம்முள் வேற்றுமை அனுபவத்தின் வெளிப்படத்தோன்றுதலானும், கடலோசை முதலாயின எழுத்தோசையின் வேருதல் எல்லார்க்கும் ஒப்ப முடிந்ததாகலானும், அவ்விரண்டன் காரணமும் தம்முள் வேறு என்பது துணியப்படும் என்க. இன்னும், அங்காப்பு முதலிய அக முயற்சியாற்பிறப்பது எழுத்தோசை எனவும், அதனைப் புலப்படுப்பதாய் எடுத்தல் படுத்தல் முதலியபுறமுயற்சியாற்பிறப்பது இசையோசை எனவும் இவ்வேறுபாடு தெரிந்துணர்ந்து கொள்க.''

''எழுத்தோசையாகிய வாக்கு ஒன்றுதானே உபாதியின்மையின் சுத்தமாயாகாரியங்களில் சூக்குமமாயும், இசையோசை முதலிய உபாதிவயத்தான் அசுத்த மாயாகாரியங்களில் தூலமாயும், பிரகிருதி மாயாகாரியங்களில் அதிதூலமாயும் நிற்றலின், அவ்வுபாதி வயத்தானே நம்மனோர்க்குப் புலப்படும் என்றுணர்க.'' விரிப்பிற்பெருகும். (348)

அறிவா யசத்தென் னு மாரு றகன்று
செறிவாய மாயை சிதைத்தரு ளாலே
பிறியாத பேரு ளாயிடும் பெற்றி
நெறியான அன்பர் நிலையறிந் தாரே. 2470

இ - ள் : அறிவு ஆய் - சித்தாக மிஞ்சி, அசத்து என்னும் - அசத்து என்று சொல்லப்படும், ஆரூறு அகன்று - முப்பத்தாறு தத்துவங்களையும் விட்டுநீங்கி,

செறிவு ஆய மாயை சிதைத்து - நெருங்கியுள்ள பிரகிருதி மாயை அசுத்தமாயை சுத்தமாயை என்பவைகளைக் கீழ்ப்படுத்தி, அருளாலே-திருவருட் சத்தியாகிய பராசத்தியின் துணையைக்கொண்டு, பிறியாத பேரருள் ஆயிடும் பெற்றி - பிறிவில்லாத பரை என்றும் சிவம் என்றும் இன்றிப் பொருந்திடும் தன்மை, நெறி ஆன அன்பர் - முறை குருவருளும் திருவருளும் கூட்ட அந்த வழியே சென்று அனுபவத்தில் தலைப்பட்டுநின்ற முத்தர்கள், நிலை அறிந்தார் - அப்பரம்பொருளின் நிலை இன்னதென உணர்ந்து சிவபோகத்தில் திளைத்திருந்தார் என்றவாறு.

*நிலம் முதல் நாதம் வரையில் உள்ள தத்துவங்கள் யாவும் அசத்தாம். மாயை சிதைத்தலாவது மாயா காரியங்களை இன்னின்ன எனக்கண்டு நீங்குதலாம்.*

*(349)*

* மனவு நனவு கனவது புந்தி
நினைவி லகந்தை சுழுனையுள் நிற்றல்
அதனை அறிசித்தந் துரியமிம் மூன்றின்
நினைவறல் மற்றது நேயத் தளவே.

இ - ள் : மனவு நனவு கனவு அதுபுந்தி நினைவில் அகந்தை - ஆன்மாக்களுக்கு உளவாகும் நனவு கனவு ஆகிய இரண்டு அவத்தைகளினும் அகக்கருவிகளாகிய மனம் சித்தம் புத்தி அகங்காரங்களில் சித்தம் ஒன்றுமின்றி மற்றை மூன்று கருவிகளும் நன்குகத் தொழிற்பட்டு நிற்கும், சுழுனையுள் நிற்றல் அதனை அறிசித்தம் - சுழுத்தி அவத்தையில் அந்த நிலையினைமட்டும்

* இது கழகப்பதிப்பில் கண்டது.

அறியக்கூடிய சித்தம் மட்டும் உளதாம், இம்மூன்றின் நினைவு அறல் துரியம் - சாக்கிரம் சொப்பனம் சுழுத்தி என்னும் மூன்று அவத்தைகளின் நினைவும் நீங்குதல் துரிய நிலையாம். அஃது அருள்நிலை என்பர். மற்றது - சாக்கிரம் சொப்பனம் சுழுத்தி துரியம் எனும் நான்கு நிலைகளும் கடந்த துரியாதீதம், நேயத்து அளவே - நேயப்பொருளாகிய சிவத்துடன் இரண்டறக் கலந்து நிற்றலேயாம் என்றவாறு.

தைசத அகங்காரத்தினின்று மனம் தோன்றும். அந்த மனமானது எதிர்ப்பட்டதொரு பொருளைச் சித்த ரூபமாய் நின்று அப்பொருளின் உண்மையை அறியாமல் பிண்டமாக அறிந்து சிந்திக்கும். மனம் சிந்தித்த பின்பு இதுவோ அதுவோ என்று அப் பொருளின்கண் ஐயுற்று நிற்கும். சந்தேகித்து நிற்ற லால் மனம் என்றும், சிந்தித்து நிற்றலால் சித்தமென் றும் மனம் இருவகைப்பட்டு நிற்கும்.

ஆன்மா, குருவருளால் மனுதிகளை அடக்கி, அகத்தே திரும்பி ஒரு குறியின் கண்ணே அறிவை நிறுத்தி, இறைவனை அறிந்து, அவ்வாறு அறிகின்ற முறையில் நிலைபெற்ற அவ்வியல்பினை அறிந்து, அங்ஙனம் அறியுங்கால் அறியும் பசுகரணங்களெல் லாம் சிவகரணங்களாகப் பேணி, இவ்வாறு கருவிக ளோடு தொழிற்பட்டு நிற்பதாகிய சகல சாக்கிரத்தில் தானே கருவி ஒன்றனோடுங்கூடாத நின்மல துரியாதீத நிலை கைகூடும்படி முயலவேண்டும். முயன்றால் சிவாநு பவத்தைத் தமதாகக்கொண்டு அநுபவிக்கலாம்.

மேற்கூறியவாறு சாக்கிரத்தில் நின்றுகொண்டே பசுகரணங்கள் எல்லாம் சிவகரணமாகக் கரணங்

கடந்த துரியாதீதத்தைப் பயில்கின்றவர்கள் இவ்வுலகின்கண்ணே கருவிகளினின்றும் நீங்கி நிட்டை பொருந்தினவரோடு ஒப்பச் சிறந்தவரே ஆவர்.

"மருவ்பசு கரணங்கள் சிவகரண மாகத், துன்னிய சாக் கிரமதனில் துரியாதீதந் தோன்ற முயல்" எனவும், "மாயைமா மாயை மாயா வருமிரு வினையின் வாய்மை, ஆயவா ருயிரின் மேவு மருளெனி லொளியாய் நிற்கும்" எனவும் இவ்வாறு ஓதுதல் பற்றியுணர்க. ஆண்டுப் பசுகரணம் போலப் பாசஞானமும் சிவஞானமேயாம் என்பது பெறப்படுதலின் "ஆற்ரு லலை கடற்கே பாய்ந்தநீ ரந்நீர்மை, மாற்றியவ் வாற்ருன் மறித்தாற்போல்" (திருக்களிற் - 11). ஆற்றுநீரானது ஆற்றின்வழியே சென்று அலையையுடைய கடலில் ஒன்றாய்க்கலந்து தன் தன்மை கெட்டிருக்கும். அது மறுபடியும் அந்த ஆற்றிலே நெடுந்தூரம்சென்று எதிர்த்தாலும், உப்பு நீராகவே இருக்கும். அதாவது கடல் நீரைக் கலந்ததனால் உண்டாகிய உப்புமயமாகவே இருக்கும் என்றபடி.



நனவின் நனவாதி நாலாந் துரியந்
தனதுயிர் தொம்பத மாமாறு போல
வினையறு சிவன் நனவாதி யாகத்
தனைய பரதுரி யந்தற் பதமே. 2471

இ - ள்: நனவின் நனவு ஆதி துரியம் நாலாம் - சாக்கிரத்தில் சாக்கிரம் சாக்கிரத்தில் சொப்பனம் சாக்கிரத்தில் சுழுத்தி சாக்கிரத்தில் துரியம் என்னும் அவத்தைகளில் துரிய அவத்தை நான்காவதாம், (சாக்கிரத்தில் துரியாதீதம் என்பது ஐந்தாவது அவத்தையாம்). தனது உயிர் - ஆன்மா கலப்புநிலையில், (த்வம்) தொம்பதம் ஆமாறுபோல - தொம்பதம் (நீ) என்று

நிற்குமாறு போலவே, வினை அறு சீவன் நனவு ஆதியாக - வினையினின்று நீங்கிய ஆன்மா, நின்மல நிலையிலே நனவு முதலாக, தனைய - தானுகிய, பர துரியம் தற்பதம் - பர துரிய நிலையை அடைந்து அதனையும் கடந்துநின்ற துரியாதீத நிலையிலே இரண்டற நிற்கும் என்றவாறு.

தனைய - தானுகிய. பர துரியம் தற்பதம் - பராவத்தையில் துரியமே தற்பதமாம்.

இதனுல், சுத்தம் என்னும் அபர விந்துவையும், வெளியாய அபர நாதத்தையும், பாழாய பரவிந்துவையும், வெறும் பாழாய பரநாதத்தையும் கடந்து, உயிர் என்பது ஒரு முதலும் அற்று ஞேயம் தானே ஆகுகையால் தற்பதம் என்றுர். (350)

தொம்பதந் தற்பதஞ் சொன்முத் துரியம்போல்
நம்பிய மூன்ருந் துரியத்து நற்ருமம்
அம்புவி யுன்னு அதிசூக்க மப்பாலைச்
செம்பொருள் ஆண்டருள் சீர்நந்தி தானே. 2472

இ - ள்: தொம் பதம் தற்பதம் சொல் முத்துரியம்போல் - முற்படச்சொல்லிய சீவ துரியமும் பர துரியமும் சிவ துரியமும் ஆகிய மூன்று துரியநிலைக்கண்ணும் தொம்பதமும் தற்பதமும் சொல்லப்படும் (ஆயினும்) அதுபோல, நம்பிய மூன்ரும் துரியத்து - நம்புதற்கு இடமான மூன்ரும் துரியமாகிய சிவ துரியத்தின்கண், நன்று ஆகும் அம்புவி உன்னு அதிசூக்கம் - நன்மையைத் தேடுதற்கு ஏதுவாகிய நிலவுலகத்தையும் அதன்கண் உளவாம் போக நுகர்ச்சிகளையும் எண்ணுவதற்கு இடமில்லாத அதிசூக்குமமும், அப்பாலை செம்பொருள் - அதற்கப்பால் செம்பொருளாகவுமிருந்து,

ஆண்டருள் சீர்நந்தி தான் அன்றே - ஆன்மாக்களை மீண்டும் பிறவியின் வாராமல் ஆட்கொண்டருளும் சிறப்பினையுடைய நந்தியென்னும் நாமத்தையுடைய பரம்பொருள் சிவபெருமானேயாவர் என்றவாறு.

மூன்றுந்துரியம் - சிவதுரியம். செம்பொருள் - மெய்ப்பொருள்.

எனவே, சுத்தமாயாகாரணம் கடந்து நின்மல மாகி நிராமயமானபரவிந்து என்னும் பராசத்தியினது முடிவில்லாத வியாத்தியாகிச் சித்தம் செல்லாத சூனியம் எங்கும் குறைவற நிரம்பி, அவ்வளவிலும் நில்லாது பரந்து ஞானபாதங்களில் முதற்பேசப்பட்ட பராசத்தி ஞானத்து மேலாகி, பூரணமான பரநாதத் தையும் தனக்குள்ளேயாக மேல் தனது எல்லையளவு செறிந்து ஓடும் நீர்மையாய்ச் சுத்தப் பேரறிவேயாகி, வேறுசந்தேகமில்லாது தீர்ந்து, பாதாள சத்திதொடங் கிப் பரந்த வியாபகமும் பலவாய சத்திகளும் அன்றி, சட சித்தாகிய எல்லாப் பொருள்களின் ஞானங்களும் தனதே ஆகிய ஆயினும், சேர்ந்த உயிர்களுக்குச் சுத்த முத்தியும் கொடுத்து உயிர்களுக்கு உயிராய் நிற்கும் பரமாய் நிர்மலமாய் நித்தமாய் ஒன்றாய்ச் செப்பற்கரிய தாய் தற்சிவம் நிற்கும் என அறிக. (351)

## 23. மும்முத்தி

சீவன்றன் முத்தி யதீதம் பரமுத்தி
ஓயுப சாந்தஞ் சிவமுத்தி யானந்த
மூவயின் முச்சொரூப முத்திமுப் பாலதாய்
ஓவுறு தாரத்தில் உள்ளுநா தாந்தமே. 2473

இ - ள்: சீவன் தன் முத்தி அதீதம் - சீவன் முத் தியாவது துரியாதீத நிலையாகும், ஓய் உபசாந்தம் பர

முத்தி - ஆன்மா தன்செயல் ஒன்றின்றி அருளின் வழியே நிற்கும் நிலையே பரமுத்தியாம், சிவமுத்தி ஆனந்தம் - சிவமுத்தி என்பது சிவானந்தமாம்; அது பரை என்றும் சிவம் என்றும் இன்றி இரண்டறக் கலந்து நின்ற இடமே சிவானந்தம் என்றறிக. மூவயின் முச்சொரூப முத்தி முப்பாலது ஆய் - மேலே கூறிய முறையால் மூன்று இடங்களினும் சீவன் முத்தி பரமுத்தி சிவமுத்தி என மூவகைப்பட்டு விளங்குவதாய், ஒவு உறு தாரத்தில் - செயலொன்றின்றி ஒழிவினைத் தருகின்ற பிரணவமாகிய தாரகத்தில், உள்ளும் நாதாந்தம் ஏ - எண்ணும் நாதாந்தமேயாம் எ - று.

*ஒவுறு தாரம் - பிரணவம்.*

*பிரித்தறியவராது ஆனந்த சொரூபமாய் நிற்றலே சிவபோகம் என்பது. நிர்விகாரியாக்கல் நின்மல சாக்கிரம், தன்வண்ணமாகச் செய்தல் நின்மல சொப்பனம், தன்னோடு ஒப்பச் செய்தல் நின்மல சுழுத்தி, அடங்கி நிற்கச் செய்தல் நின்மல துரியம், ஆனந்த சொரூபமாய் நிற்கச் செய்தல் நின்மல துரியாதீதம் எனவும் அறிக.*

*இனி, இங்கே கூறிய முத்திகள் சீவன்முத்தி பரமுத்தி சிவமுத்தி என்பன. சிவப்பேறு என்பதே முத்தி எனப்படும். முத்தி என்பது விடுதல். விடுதற்குச் செயப்படுபொருள் பாசம், ஆயினும் சிவத்தைப்பற்றி நின்றே விடவேண்டும். ஆதலின், சிவப்பேறே தலைமையாய முத்தி எனப்படும். அம்முத்தியும் பரமுத்தி சீவன்முத்தி என இருதிறத்துள் அடங்கும். பரமுத்தியாவது, பரனாகவே பேதமற நின்று பாசத்தை விடுதல். சீவன்முத்தியாவது, சீவனாகி நின்றும் சிவாநுபவமேலீட்டால் பாசத்தை விடுதல். அதாவது சீவத்*

தன்மையைச் செய்வதாகிய பாசத்தை இழந்து நிற்றல். இவ்விருவகை முத்தியுள் பரமுத்தியை விதேக முத்தி எனவும் கூறுவர். அப்பரமுத்திதான் முதற்கண் நிகழ்வது என்பர். உடம்பு நீங்கிய பின்னர்ப் பரமுத்தி உண்டென்று கூறவும், நீங்கிய உடம்பு ஆன்மாவுக்குத் தெரியாதவாறுபோல, உடம்பிலிருக்கும்போதே அவ்வுடம்பைப் பற்றிய எண்ணம் சிறிதும் இன்றிச் சாதனத்தில் உறைத்து நிற்கப்பெற்ருல் உடம்பு தோன்ருது. அப்பொழுதே சிவம் தோன்றும்; இந்நிலேயே பரமுத்தி. ஆயினும், பிராரத்த கன்மத்தால் மீண்டும் உடம்பு தோன்றவரும். தோன்றுங்கால் முன்னர் நிகழ்ந்த சிவானுபூதியைச் சிந்திக்கில் உடம்பு மறையும். இவ்வாறு உடம்பு தோன்றுதலும், மறைதலுமாகிய நிலே பிராரத்தம் உள்ள அளவும் நிகழும். ஆதலின், எக்காலத்தும் உடம்பு தோன்ருத பிராரத்த தேக ஒழிவே பரமுத்தி எனப்பட்டது. அப்பரமுத்தியாகிய சிவாநுபவ நிலேயே சாதனத்தில் உறைத்து நிற்றலால் முதற்கண் விளங்குவது என்க. (352)

ஆவ தறியார் உயிர்பிறப் பாலுறும்
ஆவ தறியும் உயிரருட் பாலுறும்
ஆவதொன் றில்லே யகம்புறத் தென்றகன்
ருேவு சிவனுடன் ஒன்றுதன் முத்தியே. 2474

இ-ள்: உயிர் பிறப்பால் ஆவது அறியார் - ஆன்மாவானது தான் பிறந்ததனுல் உண்டாகும்பயனே உற்று நோக்கிப் பலர் அறியமாட்டார், பிறப்பால் உறும் ஆவது அறியும் உயிர் - பிறந்த பிறப்பினுலே அடையும் பயனே உற்று நோக்கி ஆராய்ந்தறியும் ஆன்மா, அருட் பால் உறும் - திருவருளேச் சார்ந்து நிற்கும், அகம் புறத்து ஆவது ஒன்று இல்லே என்று அகன்று - அவ்வாறு திருவருளேச் சார்ந்து நிற்கும்

உயிர் உடம்பினும் உலகத்தினும் தனக்கு ஆவ தொன்றில்லை என்னும் உண்மையினை ஆராய்ச்சியினு லும் அருளுபதேசத்தானும் அநுபவத்தானும் நன்கு உணர்ந்து அகம்புறம் என்னும் நிலையை விட்டுநீங்கி, ஓவு சிவனுடன் ஒன்றுதல் முத்தியே - எல்லாவற்றை யுங் கடந்து அப்பால் விளங்கும் சிவபெருமானுடன் ஒன்றுதலாகிய திருவடிப் பேற்றினை எய்துதலே முத்தி யாம் என்றவாறு.

ஓவுசிவன் - உலகங்கடந்த சிவன். ஓவுதல் - நீங்கு தல்.

உலகத்து மக்கள் யாக்கையைப் பெற்றோர் அந்த யாக்கையைப் பெற்றதனுலாகிய பயனைப்பெற முந்த வேண்டும். வாழ்வாங்கு வாழவேண்டும். வாழ வேண்டும், வகையறிந்து வாழவேண்டும் என்றபடி.

"மானுடப் பிறவிதானும் வகுத்தது மனம்வாக் காய
ஆனிடத் தைந்து மாடும் அரன்பணிக் காக வன்றோ"

— சித்தி. (353)

சிவமாகி மும்மல முக்குணஞ் செற்றுத்
தவமான மும்முத்தி தத்துவத் தயிக்கியத்
துவமா கியநெறி சோகமென் போர்க்குச்
சிவமாம் அமலன் சிறந்தனன் தானே. 2475

இ - ள்: சிவம் ஆகி - சிவமாந்தன்மைப் பெரு வாழ்வுற்று, மும்மலம் முக்குணம் செற்று - தன்னைப் பற்றிச் செம்பிற் களிம்புபோல அநாதியேயுள்ள ஆண வம் கன்மம் மாயை என்னும் மூன்று மலங்களையும் சத்துவம் இராசதம் தாமதம் என்னும் மூன்று மாயா குணங்களையும் பற்றறக் கழித்து, தவம் ஆன மும்

முத்தி - தவத்தாற் பெறக்கடவனவாயுள்ள சீவன்முத்தி பரமுத்தி சிவமுத்தி ஆகிய முத்திப்பேற்றினை, தத்து வத்து அயிக்கியத்துவம் ஆகிய நெறி - தத்(அது)த்வம் (நீ)அயிக்கியத்துவம் (அசி) ஆகின்றாய் என்னும் நெறி யிலே, சோகம் என்போர்க்கு - சோகம் பாவனை பண் ணும் புண்ணியமுடையோருக்கு, சிவம் ஆம் அமலன் தானே சிறந்தனன் - சிவப்பொருளாகிய மலரகிதர் தானே சிறந்துவிளங்குவர் என்றவாறு.

"சுட்டுணர்விற்கு விடயமாகிய பிரபஞ்சத்தை இது சத்தன்று இது அசத்தன்று என ஒவ்வொன்றாகச் சுட்டி அசத்தாகக்கண்டு விட்டுநீங்கி அங்ஙனம் அறிந்து நீங்கிய தன் அறிவின்கண்ணே சுட்டுணர் விற்கு விடயமாகாத முதல்வனை ஆராய்ந்து, அச்சிவ ஞானத்தானே ஆசாரியன் 'சிவோயம்' எனத் தன் னுள்ளே பாவித்துச் 'சிவத்துவமசி' என்று அறிவுறுக் கும் சித்தாந்த மகாவாக்கியப் பொருளை நாடோறும் பயின்று, 'சிவோகம்' எனப் பாவிப்பானாயின், அந்தப் பாவகத்தின் விளங்கும் முதல்வனால் அநாதியே கூடிய பொது இயல்பையும், அதற்கு ஏதுவாகிய மல மாயா கன்மங்களையும் தான் விட்டு நீங்குமாறு, ஒள்ளிய கருடதியானத்தில் விளங்கும் கருடனால் அப்பாவகன் விடத்தைத் தீர்த்துக்கொள்ளுமாறுபோலாம் என்க" (சிவஞானபாடியம்).

சோயமாத்மா - 'அது இந்த ஆன்மா,' சிவோய மஸ்தி - 'சிவன் இதுவாய் இருக்கின்றான்' என்றுதன் னுள்ளே பாவித்து; தத்துவமசி - 'அது நீ ஆகின்றனை', சிவத்துவமசி - 'நீ சிவன் ஆகின்றனை' என்று அறி வுறுக்கும் வேதாந்த சித்தாந்தமகாவாக்கியப்பொருளை நாடோறும் பயின்று, வேதாந்தம் 'சோஹமஸ்மி' என்று கூற, சித்தாந்தம் அதனைச் 'சிவோகமஸ்மி' என்று

கூறுமாற்ருல், 'சோஹமஸ்மி' - அவன் நாளுகின்றேன், 'சிவோஹமஸ்மி' - சிவன் நான் ஆகின்றேன் என்றேனும் பாவிப்பாளுயின், அந்தப் பாவனையில் விளங்கும் சிவனுல் அநாதியேகூடியபொது இயல்பையும் அதற்கு ஏதுவாகிய மாயா கன்மங்களையும் தான் விட்டு நீங்கும் இயல்பு 'கருடோகமஸ்மி' - நான்கருடன் ஆகின்றேன் என்னும் கருடமந்திர தியானத்தில்விளங்கும்கருடனுல் அந்தக்கருடபாவனை விஷத்தைப் பிரத்தியக்ஷத்தில் தீர்த்து விடுதல் போலாம் என விரித்துரைத்துக் கொள்க.

யாதானும் ஒன்றைப்பற்றி நிற்பதன்றித் தனித்து நிற்கமாட்டாத ஆன்மா பாசத்தை நீக்கிய விடத்துச் சிவோகம் பாவனை செய்யவில்லையாயின் மீண்டும் பாசத்தைப்பற்றும் என அறிக. இச்சிவோகம் பாவனை இன்றியமையாச் சிறப்பினையுடையது. இதனுல், சிவம் உயிரோடு கலந்து நிற்றல் என்றும் உளதாயினும் உயிரினிடத்துக் கசிந்து நிற்றல் நிகழவில்லையாயின், விளங்கப்படான். கருடன் நான் எனப் பாவிக்கும் அத்துவித பாவனைக்கு மந்திரத்தினது ஆற்றலும், அவ்வாற்றல் வழிநின்று பாவிக்கும் மாந்திரீகனது ஆற்றலும் ஒருதலையான் வேண்டப்பட்டு நிலைபெறுமாறுபோல, சிவம் நான் எனப் பாவித்து நிற்கும் அத்துவித பாவனைக்கு இறைவன் கலப்பும் உயிரின் கசிவும் ஒருதலையான் வேண்டப்படும் என்பது பெறப்படும்.

ஆகவே, வேதாந்தமும் சித்தாந்தமும் உண்மையாய் நோக்குவார்க்கு அது என்னும் பதிப்பொருள் ஒன்றும், நான் என்னும் பசுப்பொருள் ஒன்றும் ஆக இருபொருள் உண்டு என்பதும், ஆனேன் என்றமையால் ஆகவொட்டாது தடைசெய்து நின்ற ஏனைப் பாசப்பொருள்கள் பிரிக்கப்படுவது போல் அவ்விரு

பொருளும் பிரிக்கமுடியாதென்பதும், ஆதலால் பிரிக்கக்கூடிய பாசத்தைப் பிரித்துப் பிரிக்க முடியாத பதிப் பொருளைச் சார்ந்த பொருளின் தன்மையை அடைதற்குரிய ஆன்மா தானுகப் பாவிக்கில் பதியேயாகும் என்பதும் நன்கு விளங்கும். இதனாலன்றே, "பண்டை மறைகளும் அது நானானேன் என்று பாவிக்கச் சொல்லுவது, இப்பாவகத்தைக் காணே" என்றருளிச் செய்தனர்.

கன்ம மலம் என்பது ஆன்மாவினுற் செய்யப்படும் நல்வினை தீவினைகள். இது அநாதி கேவலத்தினின்று சகலத்திற்கு வந்ததுமுதல் தொடர்ச்சியாய் நிகழும். சகலத்தில் முதற்கண் நிகழ்வதற்கும் ஓர் தொடர்ச்சி வேண்டப்படும். அதுவே மூலகன்மம் எனப்படும். அம்மூலகன்மமும் பலவேறு வகைப்பட நிகழ்ந்தாலன்றி அது சம்பந்தமாகப் பின்னிகழும் கன்மம் பலவேறு வகைப்பட நிகழுமாறில்லை. அங்ஙனம் மூல கன்மம் பலவேறுவகைப்பட நிகழ்தற்கும் ஒரு காரணம் வேண்டப்படும். அஃது ஆணவ மல மறைப்பின் பேதமேயாம். ஆகவே, கன்மத்தைக் கூட்டுவிப்பது ஆணவமலம் என்பது அறிக. இந்த ஆணவமலம் இயல்பாகவே கூடியிருத்தலால் அநாதி எனப்பட்டு அதனால் கூட்டப்படும் கன்மமும், அக்கன்மத்தாற் கூட்டப்படும் மாயையும் அநாதியாமாறு கண்டுகொள்க.

மெய்ஞ்ஞானத்தால் மலம் சிறிது சிறிதாக நீங்கப் பெற்று சிவம் பூரணமாய்ப் பிரகாசித்தவிடத்து மலம் பற்றறக்கழியும். (354)

சித்தியும் முத்தியுந் திண்சிவ மாகிய
சுத்தியும் முத்தி தொலைக்குஞ் சுகானந்த
சத்தியும் மேலைச் சமாதியு மாயிடும்
பெத்தம் அறுத்த பெரும்பெரு மானே. 2476

இ - ள் : சித்தியும் முத்தியும் திண்சிவம் ஆகிய சுத்தியும் - சித்திகளும் முத்திகளும் வலிய சிவமாந் தன்மைப் பெருவாழ்வைத் தரும் நின்மலதுரியாதீத நிலையும், முத்தீ தொலைக்கும் - தாபத்திரயங்களைத் தொலைப்பனவாகும், சுகானந்த சத்தியும் மேலைச் சமாதியும் ஆயிடும் - தாபத்திரயங்கள் தொலையவே பேரின்பவடிவாகிய சத்தியும் அதன்மேல் செயலொன்றின்றி நிற்பதாகிய ஞானசமாதியும் கைகூடும்,(பின்பு) பெத்தம் அறுத்த பெரும் பெருமான் அன்றே - ஆன்மாக்களுக்குள்ள பெத்த நிலையை அறவே தொலைத்தருளும் சிவபெருமானுடன் இரண்டறக் கலந்து பேரின்பவாழ்வினில் திளைத்திருக்கலாம் என்றவாறு.

தாபத்திரயமாவன: தன்னைப் பற்றி வருவன, பிற உயிர்களைப் பற்றி வருவன, தெய்வத்தைப் பற்றி வருவன என்க. (355)

## 24. முச்சொரூபம்

ஏறிய வாறே மலம்ஐந் திடைஅடைத்
தாறிய ஞானச் சிவோக மடைந்திட்டு
வேறு மெனமுச் சொரூபத்து வீடுற்றங்
கீறதிற் பண்டைப் பரனுண்மை செய்யுமே. 2477

இ - ள் : ஏறிய வாறே மலம் ஐந்திடை அடைத்து - முன்பு கேவலத்திலே ஆணவமலத்தில் அழுந்திக்கிடந்த உயிருக்கு அக்கன்மத்துக்கீடாக இறைவன் சகல நிலையில் ஆணவமலத்தின் சத்திதேய்தற்குக் கன்மம் மாயை மாயேயம் திரோதம் என்னும் நான்கு மலங்களுடனும் கூட்டி நுகர்வித்துத் தனு கரண புவன போகங்களைத் தந்து பின்பு காருணிய மிகுதியால் அவ்வாணவமல வலிகெடச் செய்து, ஆறிய ஞானம் (அடைந்திட்டு) -

(எல்லையில்லாத காலங்கள் இறப்புப் பிறப்புக்களில் அகப்பட்டு ஓய்வின்றிச் சுழன்ற அவ்வான்மாவுக்கு இருவினையொப்பு மலபரிபாகம் சத்திநிபாதம் முதலிய வற்றை நோக்கிக் குருவாக எழுந்தருளிவந்து உப தேசம்செய்து அவ்வழியிலே) சிவஞானம் தலைப்பட அவ்வான்மா, சிவோகம் அடைந்திட்டு வேறும் என - சிவோகம்பாவனை பண்ணி மலவலியைப் பற்றறக் கழித்துத் துடைப்பேம் என்று முயன்று திருவரு ளானே, முச்சொரூபத்து வீடுற்று - சிவதுரியம் பர துரியம் சிவதுரியம் என்னும் நிலையினை அடைந்து, அங்கு ஈறு அது இல் - அவ்விடத்து இறுதியில்லாத என்றது, அழியாத என்க. அது பகுதிப்பொருள் விகுதி. அங்கு ஈறு அதில் - அங்கே ஈருகச் சொல்லப் பட்ட சிவதுரியத்தில், பண்டை பரன் உண்மை செய்யும் - பழமையாகவுள்ள பரசிவத்திலே இரண் டறக்கலந்து சிவபோகத்தை நுகரும் என்றவாறு.

ஏறியவாறே மலம் ஐந்திடை அடைத்து:

அநாதி கேவலத்தில் ஆன்மாக்கள் எல்லாம் ஆணவமலத்தால் மறைப்புண்டு கிடக்கும். மலத்தின் சத்தி பலவாதலால் மறைப்பும் பலவேறு வகைப்படும். அங்ஙனம் மறைப்புண்டு கிடக்கும் ஆன்மாக்களுக்கு மலநோயைத்தீர்க்கச் சிவபெருமான் திருவுளங்கொண் டருளுவர். கொண்டருளுங்கால் கன்மமல மாயா மலங்களைக் கூட்டாமலே விஞ்ஞானத்தால் ஆணவ மலத்தை நீக்குவர். விஞ்ஞானம் என்பது விசேட ஞானம். அதாவது பாசஞானம் பசுஞானங்களினின் றும் மேம்பட்ட பதிஞானமாம். இப்பதிஞானத்தை இறைவன் எவ்வாறு நின்று உணர்த்துவன் என்னில்? அறிவினுள் அறிவாய் நின்று உணர்த்துவன் என்க.

அவ்வாறு உணர்த்துவதற்குக் கலை முதலிய தத்துவங்களால் ஆக்கப்படும் சரீரமும் புவனமும் இன்றியமையாது வேண்டப்படும். படவே, சுத்த மாயா காரியங்களாகிய கலாதி தத்துவங்களால் ஆக்கப்பட்ட சரீரத்தைக் கொடுத்து, அசுத்த மாயைக்கு மேல் வைகும்படி செய்வன். இவ்வாறு கலாதி தத்துவங்களைப் பெற்று விஞ்ஞானத்தால் அத்தத்துவங்களிற் கட்டுப்படாதிருத்தலின் விஞ்ஞானகலர் எனப் பெயராயிற்று. இத்தகைய ஆன்மாக்களுக்கு ஆணவமலபந்தம் இருத்தலால் இவர் ஒரு மலம் உடையர் எனப்படுவர். இந்த விஞ்ஞான கலருக்கு எடுத்த பிறவியையன்றி வேறு பிறவி கிடையாது.

இனி, பிரளயாகலர்: கன்ம மலத்தைக் கூட்டி ஆணவமலத்தை நீக்குதற்குரிய ஆன்மாக்களுக்கு அசுத்த மாயாகாரியமாகிய கலாதி தத்துவங்களால் ஆக்கப்பட்ட சரீரத்தைக் கொடுத்து, அவ்வசுத்த மாயையின் மத்தியில் வைகும்படி செய்து, பிரளயத்தில் இறைவன் தடத்தத்திருமேனி கொண்டு முன்னின்று அருள்செய்வன். இவருக்குப் பிரளயத்தின் பின் பிறவியில்லாமையால் பிரளயாகலர் எனப் பெயராயிற்று.

விஞ்ஞானகலரில் பிரளயத்தில் முத்தியடைபவருக்கும் இவருக்கும் வேற்றுமை என்னை? என்னில், விஞ்ஞானகலருக்குக் கன்மமலம் இல்லாமையால் பிரளயம்வரை ஒரு பிறவியேயன்றி மறு பிறவியில்லை. பிரளயாகலருக்குக் கன்மமலம் உண்மையால் ஒரு பிரளயத்துள் சில பிறவிகள் உள. இவையே வேற்றுமையாம். இவர், ஆணவம் கன்மம் என்னும் இருமலமுடையார்.

சகலர்: கன்மமலம் மாயாமலங்களைக் கூட்டி ஆணவமலத்தை நீக்குதற்குரிய மறைப்பினையுடைய ஆன்மாக்களுக்கு அசுத்த மாயாகாரியமாகிய கலாதி தத்துவங்களால் ஆக்கப்பட்ட சரீரத்தைக் கொடுத்து பிரகிருதி மாயையில் வைகும்படி செய்து பக்குவம் வந்தகாலத்து இறைவன் குருமூர்த்தியாய்த் தோன்றி நின்று அருள்செய்வன். இவர், ஆணவம் கன்மம் இரண்டுடனே மாயாமலம் உடையர் ஆதலின், மயக்கத்தினுல் பிரளயம் வரை பல பிறவிகளை எடுத்து, பிரளயத்தில் கலாதிகளுடன் ஒடுங்கிக் கிடந்து புனருற்பவம் ஆகுங்கால் மீண்டும் தோன்றி இவ்வாறே பிறப்பிறப்பிற்பட்டு உழல்வர் ஆதலின் சகலர் எனப்பட்டார். தேவர் முதல் எறும்பு ஈருகவுள்ள உயிர்கள் அனைத்தும் சகலர் எனப்படும். சகலரினும் பிரளயாகலத் தன்மை, விஞ்ஞானுகலத்தன்மை சித்தித்தல்கூடும். அதாவது, பிரகிருதி மாயா புவனப்பற்று ஞானத்தால் நீங்கப்பெற்றவர் சகலரில் பிரளயாகலராவர். இவருக்கு இறைவன் தடத்தத் திருமேனியைத் தரிசித்தல் கூடும். பிரகிருதி மாயாபுவனம் அசுத்தமாயா புவனமாகிய இருபுவனங்களின் பற்றும் ஞானத்தால் நீங்கப்பெற்றவர் சகலரில் விஞ்ஞானகலர் ஆவார். இவருக்கு இறைவன் அறிவுக்குள் அறிவாய் நின்று உணர்த்துவன். சகலரில் விஞ்ஞானு கலத்துவம் வந்தால் மேற் பிறவியில்லை. பிரளயா கலத்துவம் வந்தால் சிலபிறவியுண்டு. மேற்கூறிய விஞ்ஞானுகலர், பிரளயாகலர் அநாதியாயுள்ளவர். சகலரில் விஞ்ஞானுகலர் பிரளயாகலர் ஆகிய இருவரும் ஆதியாயுள்ளவர்.

சத்திநிபாதம் என்பது சத்தி பதிதல் எனப்பொருள்படும். அதாவது, திருவருட் சத்தியின் விளக்கம் ஆன்ம அறிவின்கண் உண்டாதல். மலபரிபாகம் என்பது மலசத்தி தேய்தல்.

இருவினையொப்பாவது மிகுந்த புண்ணியத்தின் பயனும், மிகுந்த பாவத்தின் பயனும் ஒருகாலத்து அனுபவிக்க வருங்கால் அவ்விரண்டும் ஒன்றோடொன்று முரணுதலின், திருவருட்சத்தி அவ்விரண்டனையும் அனுபவிக்கவொட்டாது தள்ளிவிடுமாதலின் அதுவே இருவினையொப்பு என்பர் ஒருசாரார். அங்ஙனமாயினும், எஞ்சிய வினையின் பயன் அனுபவித்துத்தீரவேண்டுதலின் அது இருவினையொப்பாகாது. எல்லா நல்வினைப்பயனும், தீவினைப் பயனும் அனுபவித்தொழிதலே இருவினையொப்பு என்பர் மற்றொருசாரார். அங்ஙனமாயினும், அது மலசத்தியைக் கெடுக்காது; ஆணவமலமுடைய விஞ்ஞான கலராக்குதலே ஆதலின் அதுவும் இருவினையொப்பாகாது.

இனி, இருவினை யொப்புத்தான் யாதெனின், ஆன்ம அறிவின்கண் நல்வினை தீவினைகளும், அவற்றின் பயனாகிய இன்பத் துன்பங்களும் விருப்பு வெறுப்பு இன்றி ஒப்பத் தோன்றுதலேயாம். இதனால், நான் என்னும் சீவபோதமாகிய மலச்சேட்டை தேயும். ஆதலின் இறுதியிற்கூறிய இதுவே இருவினையொப்பு என்க. (356)

மூன்றுள மாளிகை மூவர் இருப்பிடம்
மூன்றினின் முப்பத் தாறு முதிப்புள
மூன்றினி னுள்ளே முளைத்தெழுஞ் சோதியைக்
காண்டலுங் காயக் கணக்கற்ற வாறே. 2478

இ-ள்: மூவர் இருப்பிடம் மாளிகை மூன்று உள - மூவகைப்பட்ட உயிர்களுக்கான இருப்பிடமாகிய மாளிகைகள் மூன்று உள்ளன; மூவர் என்றது மூவகைப்பட்ட ஆன்மாக்களை; அவை விஞ்ஞானகலர் பிரளயாகலர் சகலர் என்பவை. இருப்பிடம் என்றது உடம்பை. அதனை மாளிகையாக உருவகம் செய்தார்.

விஞ்ஞானகலருக்குக் கலை முதலிய தத்துவங்களால் ஆக்கப்படும் சரீரமும் புவனமும் இன்றியமையாது வேண்டப்படும். ஆகலின், சுத்தமாயாகாரியங்களாகிய கலாதிதத்துவங்களால் ஆக்கப்பட்டது அந்தச் சரீரம்; அது மாளிகையாம். இருப்பிடம் - புவனம்; இவருக்கு இருப்பிடம் அசுத்த மாயைக்குமேலுள்ள இடமாம் என்றவாறு.

இந்த விஞ்ஞானகலர் பக்குவர் அபக்குவர் என இருதிறப்படுவர். பக்குவர் அப்பொழுதே சிவசாயுச்சியத்தைப் பெறுவர். அபக்குவர் உத்தமர் மத்திமர் அதமர் என முத்திறப்படுவர். உத்தமர் அணுசதாசிவர் முதலியோராய்ச் சதாசிவதத்துவத்திலும், மத்திமர் அட்டவித்தியேசுரர் முதலியோராய் ஈசுவரதத்துவத்திலும், அதமர் மூன்றரைக்கோடி தேவர்களாய்ச் சுத்தவித்தியாதத்துவத்திலும் வசிப்பர். அவ்வாறு வசித்திருந்து அதிகாரமுடையராய்ப் பிரளயத்திலும் மத்தியிலும் முத்தியடைவர்.

அணுசதாசிவராவார்: பிரணவர், சுதர், சுதீப்தர், காரணர், சுசிவர், ஈசர், சூக்குமர், காலர், அம்பு, தசேசர் எனப் பதின்மர்.

அட்டவித்தியேசுரராவார்: அனந்தர், சூக்குமர், சிவோத்தமர், ஏகநேத்திரர், ஏகவுருத்திரர், திரிமூர்த்தி, சீகண்டர், சீகண்டி என்னும் எண்மர்கள்.

அதமர் என்றது சப்தகோடி மகாமந்திரர்களை. இவர்கள் மூன்றரை மூன்றரைக் கோடிகளாகப் பிரிக்கப்பட்டு முதல் மூன்றரைக்கோடி பேர்கள், சிவன் குருமூர்த்தத்தை அதிட்டியாமல் நிராதாரமாய் நின்று சுத்தவித்தியாதத்துவத்திலும் அதன் கீழுமுள்ள விஞ்ஞானகலருக்கும் பிரளயாகலருக்கும் அனுக்கிரகிக்குமிடத்து

அதற்குக் காரணமாயிருந்து அதிகாரத்திலுள்ள வைராக்கியத்தினலே சிருட்டிக்குப் பின்பு மோட்சத்தில் சேர்க்கப்படுவார்கள். மற்ற மூன்றரைக்கோடி பேர்களும் குருக்களாவார்கள். அஃதாவது சிவன் குரு மூர்த்தத்தை அதிட்டித்துச் சகலரை இரட்சிக்குமிடத்து அதற்குக் காரணமாயிருந்து மகாப்பிரளய காலத்திலே சிவனுலே மோட்சத்தையடைவார்கள்.

சப்தகோடி மகாமந்திரர் என்றது ஏழுவித கோடிகளை ஈற்றிலுடைய மந்திரங்களுக்கு அதிபர்களையாம். இவர் எண்ணிக்கையால் ஏழுகோடியுமாவார்கள். மந்திரங்களின் ஈற்றிலமையும் ஏழுவித கோடிகளாவன: நம: ஒருகோடி, சுவாகா ஒருகோடி, சுவதா ஒருகோடி, வௌஷட் ஒருகோடி, வஷட் ஒருகோடி, பட் ஒருகோடி, ஹூம் ஒரு கோடியாகும். இவற்றுள் நம: என்பது இருடிகட்கும், சுவாகா என்பது தேவர்கட்கும், சுவதா என்பது மாதுரு பிதுருகட்கும், வௌஷட் என்பது பூதம் முதலியவர்கட்கும், வஷட் என்பது மானுடர்க்கும், பட் என்பது உக்கிர விக்கிரகங்கட்கும், ஹூம் என்பது ஆக்ஞைத் தலைவர்கட்குமாம் என்க.

மூன்றினின் முப்பத்தாறும் உதிப்பு உள என்றது ஆன்மதத்துவம் வித்தியாதத்துவம் சிவதத்துவம் ஆகிய மூவகையாயுள்ள தத்துவங்களிலே முறையே இருபத்துநான்கு ஏழு ஐந்து ஆகிய தத்துவங்கள் அடங்கியுள்ளன. அவை பிருதிவிமுதல் நாததத்துவம் ஈருக ஒடுக்க நிலையில் உள்ள தத்துவங்கள்; தோற்ற முறையிலே நாததத்துவம் முதலாகப் பிருதிவிதத்துவம் ஈருகக்கொள்க. மற்றும், தூல சூக்கும காரண உடம்புகள் என்று கூறினும் ஆம்.

எல்லாச் சரீரங்களும் தோற்றுதற்குக் காரணமாயிருத்தலால் மாயை காரண சரீரமாம். அதன்பின்

அசுத்த மாயையினின்று கலை முதலிய தத்துவங்கள் தோன்றும். அவை ஆன்மாவுக்குச் சட்டைபோன்ற தாகலின் கஞ்சுக சரீரமாம். அதன்பின் சாத்துவிகம் இராசதம் தாமதம் என்னும் முக்குணங்களாகிய குண சரீரத்தைப் பொருந்தும்; அக்குணங்களுள் அடங்கி நிற்கும். மனம் முதலியன சூக்கும சரீரம்; அதனைப் புரியட்டக சரீரம் எனினுமாம். புரியட்டகமாவது=பூத மைந்து 1, தன்மாத்திரை ஐந்து 1, கன்மேந்திரியம் ஐந்து 1, ஞானேந்திரியம் ஐந்து 1, அந்தக்கரணம் 1, முக்குணம் 1, பிரகிருதி 1, கலாதிபஞ்சகம் 1 ஆக எட்டுமாம். எலும்பு நரம்பு முதலியவற்றுடன் கூடியது தூலசரீரமாம். இவ்வாறு காரணசரீரம், கஞ்சுகசரீரம், குணசரீரம் என்னும் மூன்றையும் பரசரீரம் என்பர்.

இனி, கேவலத்தில் அறிவு தொழிற்பாடின்றிக் கிடந்த ஆன்மாவிற்குக் குருடனுக்குக் கோல் கொடுப் பதுபோல் இறைவன் சூக்கும தேகத்தைக் கருணையி ஞற் கொடுப்பன். அச்சூக்கும தேகத்தை இறைவன் தருதல் வினை காரணமாக அன்று. அறியாமையுட்பட்டு வருந்தும் காரணத்தால் தரப்பட்டதாம். அச்சூக்கும தேகம் முத்தியடையும்வரை எத்துணைப் பிறவிகளை எடுப்பினும் ஒன்ருகவே இருந்து முத்தியடையின் நீங் கும். அச்சூக்குமதேகம் எல்லா உயிர்க்கும் ஒரு தன்மை யாகவே இருக்கும். இருப்பினும், முன் பொருந்தி நின்ற அறியாமை பலவேறு வகைப்படும். ஆதலின், அவ்வறியாமைக்கேற்ப அச்சூக்கும தேகத்தினின்று தூலவுடம்பும், அவ்வுடம்பால் வினையும் மாறி மாறி வரும். ஆதலால் வினை உடல் என்னும் இரண்டிற்கும் மூலமாகியது சூக்குமதேகம். வித்து முந்தியோ மரம் முந்தியோ என ஒன்றுக்கொன்று காரணகாரியமாக உள்ளது. ஆயினும், இறைவன் முதலாவதாக மரத் தைத்தான் உற்பத்தி செய்திருத்தல்வேண்டும். இக்

கருத்துப்பற்றியே "விச்ச தின்றியே விளைவு செய்கு வாய்" என்னும் திருவாக்கும் எழுந்தது.

தூலவுடம்பு நீங்கியவிடத்து அதனோடு உடன் போகாது நிலைபெற்றுள்ளது சூக்குமவுடம்பு. சூக்கும உடம்பினின்றும் வினைப்பயனை அனுபவித்தற்குரிய வெவ்வேறுடம்புகள் உளவாம். நரகத்துன்பம் இருப்பு விலங்கும், துறக்க இன்பம் பொன் விலங்கும் போல்வன. ஆதலின், இவ்விரண்டற்கும் உரிய உடம்பு யாதனாசரீரமாம். யாதனாசரீரம் சூக்கும உடம்பின் காரியம். அது துன்பத்தை அனுபவித்தற்குரியது. பூதவுடம்பு, பூதசாரவுடம்பு, யாதனாவுடம்பு என உடம்பு மூன்று. இவை முறையே பூமி சுவர்க்கம் நரகம் ஆகிய உலகங்களுக்கு உரியன.

தூலவுடம்பிற்கு முதற்காரணம் சூக்குமவுடம்பு. அச்சூக்கும உடம்பிற்கு முதற்காரணம் மூலப்பிரகிருதியாம். அம்மூலப் பிரகிருதிக்கு முதற்காரணம் அசுத்த மாயை. சுத்த மாயையாகிய குண்டலினிசத்தி சுத்தமாய் இவ்விருமாயைக்கும் வியாபகமாய் நிற்கும் என அறிக.

மூன்றினுள்ளே முளைத்தெழும் சோதியைக் காண்டலும் என்றது தூல சூக்கும காரணசரீரங்கள் ஆகிய மூன்றினுள்ளும் உயிர்க்குயிராய் நின்று விளங்கும் சிவபெருமான் அருளால் அருட்கண்ணைப் பெற்றுடையார்க்கு அறிவிற்கறிவாய் ஆனந்த சொரூபமாய்ப் பேரொளிப்பிழம்பாய் விளங்குவன். பிரித்தறியவராது ஆனந்தசொரூபமாய் நிற்பதே சிவபோகம். அதுவே நின்மல துரியாதீதம். அந்த நிலையை அடைந்த ஆன்மா பிறப்பிறப்புக்களினின்று நீங்கும். அதனையே இங்கே 'காயக் கணக்கற்றவாறே' என்றார். காயக்கணக்கு-காயமாகிய காரியம்; கணக்கு-காரியம்.

மாளிகை - தூலம், சூக்குமம், காரணம்; மூவர் - மூவகையான ஆன்மாக்கள். காயக்கணக்கு - பிறப்பு. (357)

உலகம் புடைபெயர்ந் தூழியும் போன
நிலவு சுடரொளி மூன்றுமொன் றாய
பலவும் பரிசொடு பான்மையுள் ஈசன்
அளவும் பெருமையு மாரறி வாரே. 2479

இ - ள்: உலகம் புடைபெயர்ந்து ஊழியும்போன - மகாசங்காரம் என்று சொல்லப்படும் பேரூழிக் காலத்திலே உலகம் முழுவதும் ஒடுங்குவதாம். ஊழிக்காலங்களும் பல சென்றன.

ஊழி என்றது நித்தப்பிரளயம், பிராகிருதப்பிரளயம், மத்திமப்பிரளயம், மகாப்பிரளயம், பிரதம மகாப்பிரளயம் என ஐவகைப்பட்டு நிவிர்த்தாதி ஐங் கலைகளின் சங்காரத்தைக் குறிக்கும். இவற்றுள், நித்தப்பிரளயம் பிரமாண்டப் பிரளயம் எனவும், பிராகிருதப்பிரளயம் அவாந்தரப்பிரளயம் எனவும் பெயர் பெறும். புடைபெயர்தல் என்றது தோன்றியவாறே ஒடுங்குதலையாம்.

" சங்காரம் ஐவகைப்படும். அவற்றுள் முதலாவது நிவிர்த்தி கலையிலடங்கிய தத்துவ புவனங்களின் சங்காரம்; இரண்டாவது, பிரதிட்டாகலையிலடங்கிய தத்துவ புவனங்களின் சங்காரம்; மூன்றுவது வித்தியா கலையிலடங்கிய தத்துவ புவனங்களின் சங்காரம்; நான்காவது, சாந்தி கலையிலடங்கிய தத்துவ புவனங்களின் சங்காரம்; இறுதியது சாந்தியதீத கலையிலடங்கிய தத்துவ புவனங்களின் சங்காரம் ". " சுத்த மாயா

புவனுந்தம்' சங்கரிக்கும் சங்கார காரணனாகிய பரம சிவனை, சங்காரனாயுள்ள முதலையே என விதந்தோதி யதூஉமென்க.'' (சிவஞானபாடியம்); நிவிர்த்திகலை முதலிய கலைகளின் இயல்பைச் (சிவஞானபோதம் திராவிடமாபாடியம் இரண்டாம் சூத்திரம் மூன்றும் அதிகரணத்திற்) காண்க.

நிலவு சுடரொளி மூன்றும் ஒன்றாய - விளங்கு கின்ற சீவன் பரம் சிவம் என்று சொல்லப்படும் மூன்றும் அருள்வெளிக் கண்ணே ஒன்றாயின. அருள் வெளி - முதல்வன் சந்நிதானம்.

பலவும் பரிசொடு பான்மையுள் - பலவற்றையும் முறைப்படி ஆராய்ந்து தெளிந்து உணரும்தன்மையில், ஈசன் அளவும் பெருமையும் ஆர் அறிவார் - சிவபெரு மான் ஒன்றாயும் வேறாயும் உடனிருந்தும் உபகரிப் பினும் அப்பெருமானுடைய அளவினையும் பெருமை யினையும் யாவரே உணர்ந்து தெளியவல்லார் எ-று.

பெருவாய் முதலெண்ணும் பேதமே பேதித்
தருவா யுருவாய் அருவுரு வாகிக்
குருவாய் வருஞ்சத்தி கோனுயிர்ப் பன்மை
உருவா யுடனிருந் தொன்றாயன் றாமே. 2480

இ - ள்: பெருவாய் முதல் எண்ணும் பேதமே பேதித்து - பெரிய வடிவாயுள்ள மலைமுதல் மண்ணீ றாகவும் யானைமுதல் எறும்பு ஈறாகவும் எண்ணப்படு கின்ற பெரியனவாயுள்ள பொருள்களையும் நுண்ணிய வாயுள்ள பொருள்களையும் கண்கூடாகக் காணும்படி செய்து, அருவாய் உருவாய் அருவுருவாகி - அருவடி வாயும் உருவடிவாயும் அருவுரு வடிவாயுமிருந்து,

குருவாய்வரும் சத்திகோன் - குருவடிவாகவும் வெளிப் பட்டு நின்றருளைச் செய்யும் பராசத்திக்குத் தலைவ ராகிய சிவபெருமான், உயிர்ப்பன்மை உருவாய் உட னிருந்து ஒன்ருய் அன்ரும் - அளவில்லாத உயிர்களின் அறிவினுள்ளாக நின்று செலுத்துதலால் உடனிருந் தும் உயிரின் வேறல்லாமையால் ஒன்ருயும் உயிர் அறிவின் உள்ளீடாக நிற்றலால் வேருயும் உளன் என்றவாறு.

மலை மண் என்பன அஃறிணைகட்கும், யானை எறும்பு என்பன உயர்திணைப் பொருள்களுக்கும் பெருமை சிறுமைகட்கு உதாகரணமாக எடுத்துக்காட் டப்பெற்றன. பெருவாய் - (அளவினுல்) பெருமை வாய்ந்த. பெரு=பெருமை - பருமை. முதல் எண் ணும் - முதலாக எண்ணப்படும்; ஆக என்னும் சொற் பெய்துகொள்க. பேதமே பேதித்து - வேறுபாடுகள் தோன்றும்படியாகப் பேதப்படுத்தி என்க.

உடலின் உயிர்போல முதல்வன் உயிர்களோடு கலந்துள்ள தன்மையால் உயிர்களேயாயும், கண்ணில் அருக்கன்போலப் பொருட்டன்மையால் வேருயும், கண்ணொளியின் ஆன்மபோதம்போல உயிர்க்குயி ராதற்றன்மையான் உடனுயும் இருத்தல் உணரப்படும்.

உயிரோடு ஒன்ருய் நிற்றல், வேருய் நிற்றல், உடனுய் நிற்றல் ஆகிய முத்திறமுடையன் இறைவன். ஒன்ருய் என்றதனுல் உயிர் தனித்து நில்லாது என்ப தும், அன்ரும் என்றதனுல் தனித்து நில்லாவிடினும் இறைவனை உயிர் அறிதல்கூடும் என்பதும், உடனி ருந்து என்றதனுல் உயிர் அறியுங்காறும் உடனிருந்து அறியும் என்பதும் அறிக.

"ஈருய்முத லொன்ருயிரு பெண்ணுண்குண மூன்ருய்
மாருமறை நான்காய்வரு பூதம்மவை யைந்தாய்
ஆருர்சுவை யேழோசையொ டெட்டுத்திசை தானுய்
வேருயுட னுனிடம் வீழிம் மிழ லேயே"

"உரைசேரு மெண்பத்து நான்குநூ
ருயிரமாம் யோனிபேத
நிரைசேரப் படைத்தவற்றி னுயிர்க்குயிரா
யங்கங்கே நின்ருன் கோயில்"

—திருஞான - திருவீழி - தேவா.

குருவாய் வரும் சத்திகோன்: நித்த முத்த சுத்த சித்து எனப்படும் தலைவனுகிய அந்தப் பெருமான் குருவடிவங்கொண்டு எழுந்தருளி வந்து, தன்னையும் தலைவனையும் அறியும் வண்ணம் உணர்த்தி, ஐம்பொறியினின்று நீங்குதற்கு, அதனேடு கூடும்படி செய்த மலவலியைக் கெடுத்துத் திருவடிக்கீழ் வாழ்விப்பன். இதனை, "அருபரத் தொருவன் அவனியில் வந்து - குருபரன் ஆகிய பெருமையும்" என்னும் திருவாக்கானுணர்க. "உயிர்க்குச் சற்குருவாய் வருவது அரனே", "இனி, இவ் வான்மாக்களுக்குத் தமது முதல்தானே குருவுமாய் உணர்த்தும் என்றது" (சிவஞான போதம் - 8 சூத் - 2 அதிகரண). "அறிவுக் கறிவாகி அவ்வுறிவுக்கெட்டா, நெறியிற் செறிந்தநிலை நீங்கிப் - பிரியாக், கருணை திருவுருவாய்க் காசினிக்கே தோன்றிக், குருபரனென் ருேர்திருப்பேர் கொண்டு" (கந்தர் கலிவெண்பா). (359)

மணியொளி சோபை யிலக்கணம் வாய்த்து
மணியென லாய்நின்ற வாறது போலத்
தணிமுச் சொரூபாதி சத்தியாதி சாரப்
பணிவித்த பேர்நந்தி பாதம்பற் ருயே. 2481

இ - ள் : மணி ஒளி சோபை இலக்கணம் வாய்த்து - படிகக்கல்லினது ஒளியும் நிறமும் போன்ற இலக்கணம் வாய்க்கப்பெற்று, மணி எனல் ஆய் நின்றவாறது போல - மாணிக்கக் கல் என்னும்படி நிற்கும் தன்மையைப்போல என்றது படிகம் வெண்ணிறம் உடையது, ஒளியையுடையது. எனினும், அப்படிகக் கல் ஏனைய நிறங்களைச் சார்ந்தபோது அந் நிறத்தையும் அவ்வொளியையும் பெற்று விளங்கும். அதுபோல, ஆன்மா சார்ந்ததன் வண்ணமாய் நிற்கும் இயல்புடையது. ஆயினும் அது மலத்தைச் சார்ந்த போது மலமாயும், சிவத்தைச் சார்ந்தபோது சிவமாயும் நிற்கும். எவ்வாறெனில், கேவலத்தில் ஆன்மா ஆணவ மலத்துள் அழுந்தி அறிவுவிளக்கமின்றி அறியாமையே சொரூபமாகக் கிடந்தது. பின் இறைவன் இரக்கங் கொண்டு ஆணவமலத்தில் அழுந்திக்கிடந்த உயிரைச் சகலநிலையிலே எடுத்துக் கருவிகரணங்களைக் கொடுத்து உபகரிக்க, அவ்வான்மா ஐம்புலன்களைச் சார்ந்து சுட்டறிவினை உடையதாய்ச் சிற்றறிவினையுடையதாய் நிற்கும். பின்பு இறைவன் திருவருளால் சுத்த நிலையை யடைந்து இறைவனைச் சார்ந்து சிவப்பேறடையும். தணிமுச்சொரூபாதி சார சத்தியாதி சார—பொருந்திய சீவன் முத்தி பரமுத்தி சிவமுத்திகளைச் சார்தற் பொருட்டுச் சீவதுரியம் பரதுரியம் சிவதுரியம் முதலிய நிலைகளிலே திருவருட்சத்தி முதலிய சத்திகள் வந்து பொருந்த, பணிவித்த பேர் நந்தி பாதம் பற்றாய் ஏ - அடங்கிநிற்கும் நிலையினைக் கொடுத்துச் சிவபோகத்தை நுகரச்செய்யும் பெருமையினையுடைய சிவபெருமானுடைய திருவடிகளைப் பிரியாது பற்றிநின்று வாழ்வாயாக என்றவாறு.

சிவபெருமான் சிவந்த திருமேனி நிறத்தையுடையவ ராகலின் மாணிக்கமணி எனக் கூறலாயிற்று. மணி - மாணிக்கம் என்க. மணி என அடையின்றிக் கூறின் நீலமணியையே குறிக்குமாயினும் இங்கே மாணிக்கம் எனக்கொள்க. ஆன்மா படிகம், சிவன் மாணிக்கம். படிகம் செம்மணியினுள் அடங்கிச் செந்நிறம் பெற்று விளங்கும். ஆன்மா, சிவத்தைச் சார்ந்து சிவமாந்தன் மைப் பெருவாழ்வைப் பெற்று வாழ்வதாம். இறைவன் ஆணையால் சிவசத்திகள் வந்து பொருந்த அப்பெரு நிலையாகிய சிவத்தைச் சார்ந்து சிவபோகம் நுகரும் என்றபடி. நந்தி பாதம் பற்ருய்: பற்ருய் - பற்றுவா யாக. (360)

கல்லொளி மாநிறஞ் சோபைக் கதிர்தட்ட
நல்ல மணியொன் றி னுடியொண் முப்பதஞ்
சொல்லறு முப்பாழிற் சொல்லறு பேருரைத்
தல்லறு முத்திராந் தத்தனு பூதியே. 2482

இ - ள்: கல் ஒளி மாநிறம் சோபை கதிர் தட்ட - காவிக்கல்லினது ஒளியும் சிறந்த நிறமாகிய விளங்கும் கதிரும்பொருந்த, நல்ல மணி ஒன்றின் - அந்த ஒளியை யும் நிறத்தையும் தூய வெண்ணிறமுடைய படிகமணி பொருந்தப்பெற்று விளங்குதல்போல், நாடி - ஆராய்ந்து, ஒண்முப்பதம் சொல் - ஒள்ளிய உண்மையினை உணர்த் தும் தத் துவம் அசி (தத்துவமசி) எனும் மகா வாக்கியப் பொருளை உணர்ந்து, அறு முப்பாழில் - அற்ற போதப் பாழ் சீவப்பாழ் சிவப்பாழ் என்னும் முப்பாழின் உண்மையினையும் கண்டு, சொல் அறு பேர் உரைத்து - சொல்லுதற்கு ஒண்ணுத அசபா மந்திரத்தைக்கணித்து, அல்(லல்) அறும் - பிறப் பிறப்புக்களாகிய அல்லலி னின்று நீங்கும், முத்திராந்தத்து அனுபூதி - முத்திரை

களின் முடிவாகிய சின்முத்திரையால் பெற்ற சுவானுபூதியினுல் என்றவாறு.

முத்திராந்தத்து அனுபூதியால் அல்லல் அறும். சொல் அறு பேர் - அசபா மந்திரம்; அஃது ஓரெழுத்தொருமொழி.

தன்னைச் சார்ந்த பலவேறு வகைப்பட்ட நிறங்களையே தன்னிடத்துக் காட்டும் பொது இயல்புடைய படிகக்கல்போல ஆன்மாவானது தன்னைச்சார்ந்த ஐம்புலன்களின் இயல்பே தன்னிடத்து விளங்குவதாகிய தனது சார்ந்ததன் வண்ணமாம் இயல்பை முதற்கண்ணே சிந்தித்து அறிந்துகொண்டு, அந்த நிறங்கள் படிகத்துக்கு வேறு என்று அறியுமாறுபோல, பல்வேறு வகைப்படும் இயல்பினையுடைய பொது இயல்பைச் செய்யும் ஐம்பொறிகளையும் தனக்குவேறு எனத் தெளிந்து, அப்பொறிகளாலாய அப்பொது இயல்பு பொய் என்று நீங்குமாறு தனது சிறப்பியல்பை உணர்ந்தானுயின், அவன் பரம்பொருளாகிய சிவத்துக்கு அடிமையாய், அப்பரம்பொருள் இயல்பு தன்னிடத்து விளங்க நிற்பன்; நிற்கவே முன் விளங்கிய பொது இயல்பு தனக்கு வேருக நீங்கும் என்க.

ஒண் முப்பதம் சொல்: அஃதாவது தத் துவம் அசி என்பது. தத் என்னும் பதம் அது என்னும் பொருளைத் தந்து சிவனைக் குறித்ததாம். துவம் என்பது நீ என்பதாயிற்று. நீ என்றது ஆன்மாவை. தத் பதம் துவம் பதம் இரண்டனையும் ஆராய்தல் வேண்டும். ஆராயும்பொழுது ஆன்மஞானத்தால் அன்றித் திருவருள் ஞானத்தால் ஆராய்தல்வேண்டும். தத் பதத்திற்குரிய சிவத்தைத் திருவருளால் ஆராய்தலாம். அசி - ஆகின்ருய் என்பது. எனவே, நீ சிவமாந்தன்மைப்பெருவாழ்வை அடைகின்ருய் என்பதாம்.

உடந்தசெந் தாமரை யுள்ளுறு சோதி
நடந்தசெந் தாமரை நாதந் தகைந்தால்
அடைந்த பயோதரி யட்டி யடைத்தல்
விடந்தரு வாசலை மேல்திற வீரே. 2483

இ-ள்: உடந்த செந்தாமரை உள்ளுறு சோதி - எதிர்ந்த ஆயிரவிதழ்த் தாமரையினுள்ளே விளங்கும் சோதியை நோக்கி, நடந்த செந்தாமரை நாதம் - செல்லும் மூலத்தாமரையினின்றெழும் ஒலியானது, தகைந்தால் - அருளால் கைகூடுமாயின், அடைந்த பயோதரி அட்டி - அங்கே பொருந்தும் அமுதேசுவரி வெளிப்பட்டு, அடைத்தல் விட-(அன்பில்லாதாருக்கு) அடைத்திருக்கும் அச்செயல் நீங்குமாறு, தருவாசலை மேல் திறவீர் - அமுதைப்பொழியும் வாயிலை மேலே (அன்பின்பெருக்கால்) திறக்கும்படி செய்வீர் எ-று.

உடன்ற - மாறுபட்ட, எதிர்ந்த; உடன்ற என்றது உடந்த என நின்றது. தத்துவங்களைக் கடந்து அறிவு மாத்திரையாய் நின்று இச்சாஞான சொரூபியான அவிநாபாவசத்தியின் சகத்திராம்சமான நாதஉண்மையினைக் குருவருளால் அறிந்து, பின்னர் பிரமரந்திரத்திலுள்ள அமிர்தப்பிரவாகத்தால் நிரம்பச் செய்து, பின்னர் திருவருளினை இரண்டற இருந்து அனுபவிக்கத்தக்க நிலையினை அதற்கு உபாயமான ஒருமொழியினைப்பெற்று மோனநிலையில் நின்று அனுபவித்தல் வேண்டும். ஒரு மொழியாகிய அசபையின் இயலறிந்து, குண்டலிசத்தியை வணங்கி, அவள் அருளினால் சந்திரமண்டலத்தின் அமிர்தைப் பருகி, அமிர்தவுருவாகி, வெற்றி பொருந்தும் சிவயோக நிலையை அடைந்து அதன் வழியே ஞானநிலையை அடைய வேண்டும். அகண்டாகார அன்னையின்

அருளைப்பெற்றால் சுத்தாத்துவிதம் பெற்றுய்யலாம் என்க. (362)

## 25 முக்கரணம்

இடனொரு மூன்றி லியைந்த வொருவன்
கடனுறு மவ்வுரு வேறெனக் காணும்
திடமது போலச் சிவபர சீவர்
உடனுறை பேதமு மொன்றென லாமே. 2484

இ - ள் : இடன் ஒரு மூன்றில் இயைந்த ஒருவன் - தான் தங்குதற்கு இடமாகவுள்ள தூலவுடம்பு, சூக்கும வுடம்பு, காரணவுடம்பு என்னும் மூன்றினும் பொருந்திய ஆன்மாவானது, கடன் உறும் அ உரு வேறு என காணும் திடம் அதுபோல - தனக்கு உரியதாகக் கொடுக்கப்பட்ட அந்த உடம்புகளெல்லாம் தனக்கு வேறானவை என்று குருவருளால் அறிந்து நீங்கும் அந்த உறுதியைப்போல, சிவ பர சீவர் உடன் உறை பேதமும் ஒன்று எனல் ஆம் - சிவம் பரம் சீவர் என்னும் மூன்றும் ஒன்றாக விளங்கும் வேறுபாடுகளும் ஒன்று என்றே சொல்லத்தக்கனவாம் என்றவாறு.

தூல உடம்பிற்கு முதற்காரணம் சூக்கும உடம்பு, அச்சூக்கும உடம்பிற்கு முதற்காரணம் மூலப்பிரகிருதி, அம்மூலப் பிரகிருதிக்குக் காரணம் அசுத்த மாயை. அசுத்த மாயையே பிரபஞ்சத்திற்கு மேலாகிய முதற்காரணம். பிரகிருதி மாயை அசுத்த மாயையாகிய இரு மாயைகளால் உண்டாகும் தூல சூக்குமங்களாகிய இருவகைப் பிரபஞ்சமும் ஆன்மா சிவத்தினை அடைவதற்கு ஏதுவாகிய பக்குவகாலம் பொருந்துதற் பொருட்டுப் பெத்த காலத்து இறைவனால் உளவாவன. மாயா காரியங்களெல்லாம் சிவத்தைச் சார்தற்பொருட்டே

யாம். மலங்களை நீக்குமுகத்தால் தனுகரணாதிகளும் சிவத்தினைச் சார்தற்பொருட்டென்க.

ஐம்புலன்களால் மயங்கித் தன்னையுணராத ஆன்மாவானது அறிவாய், வியாபகமாகிய தன் இயல்பைச் சடமாய் ஏகதேசமாகிய ஐம்பொறிகளுக்கு வேருக உணரும் வியாபக உணர்வுக்கு, அவ்வைம்பொறிகளால் ஆகக்கடவது ஒன்றில்லை என்று ஞானுசாரியர் அறிவுறுத்த, மற்றோர் காரணம் வேண்டாது தனக்கு ஆதாரமாகிய சிவபெருமான் திருவடியையே தலைப்படும் என்பது கருத்து. (363)

ஒளியை யொளிசெய்து வோமென் றெழுப்பி
வளியை வளிசெய்து வாய்த்திட வாங்கி
வெளியை வெளிசெய்து மேலெழ வைத்துத்
தெளியத் தெளியுஞ் சிவபதந் தானே. 2485

இ - ள்: ஒளியை ஒளிசெய்து ஓம் என்று எழுப்பி - திருவருளால் மூலாக்கினியை அசபா மந்திர உச்சாரணத்தால் ஒளிரச்செய்து பிரணவத்தால் மேலெழச் செய்து, வளியை வளிசெய்து வாய்த்திட வாங்கி - பிராணனை இரேசக பூரகம் செய்யாமல் கும்பகம் செய்து சுழுமுனையிலே நிறுத்திப் பொருந்துமாறு உள்ளே நிரப்பி, வெளியை வெளிசெய்து-வெளியாகிய அபரநாதத்தைப் பராசத்தி வெளியிலே படரச்செய்து, மேல் எழவைத்து - மேலேயுள்ள பர விந்துவையும் பரநாதத்தையும் கடந்து சென்று அங்கே வைத்து, தெளிய - இவைகளிலே தோய்ந்த குணங்கள் ஒன்றுமில்லையாய் உயிர் என்பது ஒருமுதலும் அற்று ஞேயம் தானேயாகுகையைத் தெளிய, சிவபதம் தானே தெளியும் - சிவபதமாகிய அந்த ஞேயப்பொருள் தானே விளங்கித் தோன்றுவதாம் என்றவாறு.

ஒளியை என்றது ஆன்மாவை எனவுமாம். ஒளி செய்து - தூயதாக்கி. எனவே, சுத்தாவத்தையில் உண்டாகிய பஞ்சபேதமான அவத்தையையும் கடந்த பேரொளியே கதியாகச் செய்து என்க. வெளியை வெளிசெய்து - கலைகளும் இந்த சதாசிவமூர்த்திகளும் தனுகரணம் முதலியவையாகக் காரணமான சுத்த மாயையின் அதோமுகமான விந்துவான பராசத்தியை யும் அந்தச் சுத்தமாயையின் ஊர்த்துவமுகமாய் ஓசை வடிவாகிய அபரநாதத்தையும் புறகிட்டு மேற்சென்று சுத்தமாயா காரணங் கடந்து நின்மலமாகி துவாத சாந்தப்பெருவெளியிலே தியானம்செய்ய என்க.(364)

முக்கர ணங்களின் மூர்ச்சைதீர்த் தாவதக்
கைக்கா ரணமென்னத் தந்தனன் காணந்தி
மிக்க மனோன்மனி வேறே தனித்தேக
ஒக்கும துன்மனி யோதுட் சமாதியே. 2486

இ - ள்: முக்கரணங்களின் மூர்ச்சை தீர்த்து ஆவது - மனம் வாக்குக் காயங்களாகிய திரிகரணங் களின் சோர்வையகற்றி அதன்முகமாக ஆகவேண்டிய தாகிய, அக் கைக் காரணம் என்ன நந்தி தந்தனன் காண் - அந்தக் கையில் வைத்தறியும் பொருள்போலச் சிவபெருமான் கொடுத்தருளினார், மிக்க மனோன்மனி - மேம்பட்ட புருவ நடுவாகிய ஆக்ஞையில் விளங்கும் மனோன்மனிசத்தி, வேறே தனித்து ஏக - அவ்விடத்தை விட்டு மேலே தனித்துச் செல்ல, ஒக்கும் அது உன் மனி - பொருந்தும் அது உன்மனிகலையான்; உன்மனி கலை ஒன்றுந் தோன்றாத பேரொளியாதலால் ஒரே அருளாய் அநாகதசிவத்தை அநுபவிக்கும் இடமாய் மகாசூக்குமமாய் உள்ளது. சமனைவரையிலுள்ளவை பாசக்கூட்டம்; உன்மனை அந்தத்தில் பிராஸாத மந்திர

வாச்சியராகிய பரமசிவன் விளங்குகிறார், ஓது உள் சமாதியே - அதுவே வேதசிவாகமங்களில் ஓதப்படும் அகச்சமாதியாம்; இது நிர்விகற்பசமாதியாம் எ - று.

இனி, பன்னிரண்டு கலைகளையுடைய பிராஸாதத்தில் முதல் ஹகாரம்; அதன்மேல் அகாரம்-1, உகாரம்-2, மகாரம்-3, விந்து-4, அர்த்தசந்திரன்-5, நிரோதினி-6, நாதம்-7, நாதாந்தம்-8, இடப்புறத்தில் விந்துவோடு கூடிய கலப்பை வடிவான சத்தி-9, அப்பால் வியாபினி-10, அப்பால் சமனை-11, கடையில் உன்மனை-12; இந்த முறையே பன்னிரண்டு கலைகளாம்.

பதினாறு கலைகளையுடைய பிராஸாதத்தில் முன் கூறப்பட்ட அகாரம் முதல் வியாபினி வரையில் உள்ள கலைகள்-10, வியாபினிக்கு அப்பால் வியோமரூபை-1, அனந்தை-2, அநாதை-3, அநாசிருதை-4 இந்த நான்கும் நடுவில் உள்ளன. அப்பால் முன்போலவே கடையில் சமனை-1, அப்பால் உன்மனை-2; இப்படிப் பதினாறு கலைகளும் காண்க.

பிராஸாத மந்திரகலைகளின் தானங்களும், ஆறு அத்துவாக்களின் வியாப்தியும், காரணேசுவரரும் வருமாறு: சிவபீஜம் குஹ்யப் பிரதேசம் முதல் நாபி வரை வியாபித்துள்ளது. அப்பால் பிருதிவி முதல் பிரகிருதிவரையில் ஔகாரம் வியாபித்துள்ளது. அது தனது காரணேசுவரராகிய பிரமா வசிக்கும் இருதய கமலத்தில் உள்ளது. பிருதிவிக்கு அப்பால் கலா தத்துவம் வரையில் வியாபித்து விஷ்ணுவைக் காரணேசுவரராகவுடைய உகாரம் கண்டத்திலிருக்கிறது. அப்பால் மாயை வரையில் வியாபித்து உருத்திரனைக் காரணேசுவரராகவுடைய மகாரம் தாலுஸ்தானத்தில் இருக்கிறது. அப்பால் சுத்தவித்தை ஈசுரம் என்னும் இரண்டு தத்துவங்களையும் வியாபித்து இருக்கின்ற

அனந்தேசுவரரைக் காரணேசுவரராகவுடைய விந்துவானது புருவ மத்திய ஸ்தானத்தில் இருக்கிறது. அப்பால் சாதாக்கியம் சத்தி என்னும் இரண்டு தத்துவங்களையும் வியாபித்திருக்கின்ற சதாசிவனைக் காரணேசுவரராகவுடைய அர்த்தசந்திர - நிரோதினி - நாத - நாதாந்த கலைகள் என்னும் நான்கும் பிரமரந்திர ஸ்தானத்திலிருக்கின்றன. அப்பால் சத்தி, வியாபினி, சமனை, உன்மனை ஆகிய கலைகள் நான்கிற்கும் பிரமரந்திரம் முதல் துவாதசாந்தம் வரையில் ஸ்தான வியாப்தி. அநாகத சிவன் காரணேசுவரர். அதற்கப்பால் பரமசிவம் தத்துவங்களைக் கடந்திருக்கும்.

இனி, மேதை என்னும் ஔகாரம் அக்கினி சுவாலை நிறம், ஊகாரம் சூரிய சந்திர நிறம், மகாரம் மின்னல் நிறம், விந்து தீபநிறம் எனக் கலைகளின் நிறம் சொல்லப்படும். அர்த்த சந்திரன் நிரோதினி இரண்டும் அர்த்த சந்திர நிறம், நாதம் மணிநிறம், நாதாந்தம் மின்னல் நிறம்ஆம். அதற்குமேல் சத்தி சதசூரியப் பிரகாசமும், வியாபினி சகத்திர சூரியப்பிரகாசமும், சமனை கோடி சூரியப்பிரகாசமும், உன்மனை அளவில்லாத சூரியகாந்தியும் உள்ளது எனப்பேதம்அறிய வேண்டும். உன்மனைக்கு அப்பால் உள்ள பரசிவன் தெளிந்த கண்ணாடி நிறமும், சரற்காலத்துத் தண்ணீர் நிறமும் உடையவர் என்று அறிக. (365)

## 26. முச்சூனிய தொந்தத்தசி

தற்பதந் தொம்பதந் தானும் அசிபதந்
தொற்பத மூன்றுந் துரியத்துத் தோற்றவே
நிற்ப துயிர்பர னிகழ்சிவ மும்மூன்றின்
சொற்பத மாகுந் தொந்தத் தசியே. 2487

இ - ள் : தத் பதம் - அது என்னும் தற்பதமும், தொம் பதம் - (த்வம்) நீ என்னும் தொம் பதமும், தான் ஆம் அசி பதம் - தன்மயமாவது உணர்த்தும் அசி பதமும்: (அசி - ஆனுய் என்பது) தொல் பதம் மூன்றும்- (ஆகிய) அநாதியான பதங்கள் மூன்றும், துரியத்து தோற்ற வே - நின்மல துரிய நிலையின்கண் தோற்ற, உயிர் பரன் நிகழ் சிவமும் நிற்பது - அத்தோற்றத்தின் கண் ஆன்மாவும் பரமும் சிவமும் நிற்பதாம், (அவ் வாறு நிற்பது) மூன்றின் சொற் பதம் ஆகும் - சீவன் பரம் சிவம் என்னும் மூன்று பொருளையும் விளக்கும், (மகாவாக்கிய மாகிய) தொம் தத் அசி - தத்துவமசி என்பதாம் என்றவாறு.

ஞானுசாரியன் ஆன்மாவின் பக்குவம் நோக்கி, அது நீ ஆனுய் என்று உபதேசம் செய்யக்கேட்ட அப் பக்குவான்மா அம்மந்திரப் பொருளாகிய சிவமும் தியானிப்போனுகிய ஆன்மாவும் இரண்டறக் கலந்து அக்கலப்பினுல் சிவமாந்தன்மைப் பெருவாழ்வுறும் என்க. சீவ துரியம் பரதுரியம் சிவதுரியம் என்னும் அவத்தையைக் கடந்தது சிவதுரியாதீதம் என்பது. சீவதுரியம் முதல் சிவதுரியம் ஈருன பத்து அவத்தை கள் வருமாறு: சீவதுரியம், சீவதுரியாதீதம், பரநனவு, பரகனவு, பரசுழுத்தி, பரதுரியம், சிவநனவு, சிவகனவு, சிவசுழுத்தி, சிவதுரியம் என்பன. பரதுரிய சாக்கிரம்: பரந்த உலகத்தை எஞ்சுதலின்றி இருந்தநிலையிலேயே ஒருசேர நுகர்தல். பரதுரிய சொப்பனம்: நுண்ணு ணர்வால் நுகர்தல். பரதுரிய சுழுத்தி கருவிகரணங் களின் உருவை மட்டும் உணர்தலாம். அதுவும் கெட்டநிலை பரதுரியதுரியம்; இதுவே சிவதுரியம் என்க. பரதுரிய சாக்கிரமும் பரதுரிய சொப்பனமும் உண்மையான அமைதியாம். சகல கேவல சுத்தங் களின் சுழுத்திக்கு இதுவேருனது என்றுணர்க. (366)

தொந்தத் தசிமூன்றில் தொல்கா மியமாதி
தொந்தத் தசிமூன்றில் தொல்தா மதமாதி
வந்த மலங்குண மாளச் சிவந்தோன்றின்
இந்துவின் முன்னிருள் ஏகுதல் ஒக்குமே. 2488

இ - ள்: தொம் தத் அசி மூன்றில் - தொம் பதமும் தத் பதமும் அசி பதமும் ஆகிய மூன்றினிடத்து, தொல் காமியம் ஆதி - தொன்மையாகவுள்ள காமியமும் மாயையும் ஆணவமும் என்னும் மும்மலங்களும், தொம் தத் அசி மூன்றில் தொல் தாமதம் ஆதி - தொம் தத் அசி என்னும் மூன்று பதங்களிலே தாமதம் இராசதம் சத்துவம் என்னும் மாயாகுணங்களும் உள்ளன, வந்த மலம் குணம் மாள - முன்னைய வினைகளை உண்டு கழிக்கவும் மலவன்மையைக் கெடுக்கவும் இறைவனால் மாயாகாரியமாக உதவப்பட்ட இவ்வுடம்பைக்கொண்டு வந்த மலங்களையும் குணங்களையும் தொலையும்படி செய்ய,

"புண்ணிய பாவங்களைப் பயக்கும் விருப்பு வெறுப்புக்களாய்ப் பொருந்துகின்ற இக்கன்மமலமும், மண்முதல் மாயாதத்துவம் ஈருய்க் காணப்படுகின்ற இம்மாயா மலமும், சுட்டியறிவதாகிய விபரீத உணர்வைப் பயக்கும் இவ்வாணவ மலமும் என்னும் மும்மலங்களும் மெய்ஞ்ஞானிக்குஆகா வாகலின் அவற்றை விடுத்தொழி"ய வேண்டும். விடுத்தொழித்தலாவது "அஞ்ஞானம் ஏகதேசக் காட்சியானுயது எனவும், இவ் ஏகதேசக் காட்சி விருப்பு வெறுப்புக்களது தோற்றத்தானுயது எனவும், அத்தோற்றமும் பிராரத்தவினை நுகர்ச்சிக்கண் சென்ற தற்போதத்தான் ஆயது எனவும் அறிந்து, தற்போதம் முனையாதவாறு பரிகரித்துச்

சிவஞானத்துள் அடங்கி ஞானநிலையில் உறைத்து நிற்ற''லாம். ஆகலின் மாள என்றார். அஞ்ஞானத்தைக் காட்டுதல் மாயை கன்மங்கட்கு ஆணவமலச்சார்வா முகிய செயற்கை. ஆணவமலத்திற்கு அஃது இயற்கையாம்.

மூலமலம் ஆணவம், வந்தமலம் கன்மம் மாயைகள். உயிரினிடமாக அநாதியே தங்கிய மலம் ஆணவமாகலின் அதற்கு அழிவில்லை, அதன் வலி கெடுதலேயாம். 'மலங் குணம் மாள' என்றது மலத்தினது வலி கெட என்க. காமியம், கான்மியம் எனவும் பெயர் பெறும்; கன்மம் அதன் மூலத்தை நோக்கலான்: கன்மம் செய்யப்பட்டுள்ள வினை.

இனி, தொல் தாமதம் ஆதி வந்த குணம் மாள: அசுத்தமாயையினின்றும் காலம் முதலிய தத்துவங்கள் தோன்றிய பின்னர், அத்தத்துவங்களுள் ஒன்றாகிய கலாதத்துவத்தினின்றும் குணங்கள் அடங்கியிருக்கின்ற மூலப்பிரகிருதி முதல்வன் ஆணையால் தோன்றும். அம்மூலப் பிரகிருதியினின்றும் சாத்துவிகம் இராசதம் தாமதம் என்னும் மூவகையான குணதத்துவம் தோன்றும். அக்குணதத்துவத்தில் போகத்துக்குச் சாதகமாகிய புத்தி முதலிய தத்துவங்கள் தோன்றி அத் தத்துவங்களெல்லாம் குணவடிவமாகவே முதல்வன் ஆணையால் உயிரைப் பந்திக்கும். அதனால் போகம் அனுபவிக்கும் இடமெல்லாம் உயிரும் அக்குணரூபமாக நிற்கும்.

தாமத குணமானது ஒன்றிலும் திருப்தியில்லாமையையும், உற்சாகம் இன்மையையும், ஈனப் பிருவிருத்தியையும், கோட்சொல்லுகையையும், அசுத்த

உணவை உண்பதையும், அதிக நித்திரையையும், கர்வத்தையும், சோம்பலையும், பிறருடைய மதிப்பைக் குறைக்க எண்ணுதலையும், அறிவு இல்லாமையையும், மோகத்தையும் உண்டுபண்ணும்.

இராசத குணமானது, லௌகீகப் பிரவிருத்தியையும், கோபம் முதலிய குரூரத்தன்மையையும், யான் எனது என்னும் அபிமானத்தையும், வஞ்சனையையும், இரக்கமில்லாமையையும், போகத்தின்கண் இச்சையையும், டம்ப நடையையும், துக்கத்தையும் உண்டு பண்ணும்.

சாத்துவிக குணமானது பொறுமையையும், மன உறுதியையும், மனத்தின் சூட்சுமத்தையும், துன்பத்திலும் சந்தோஷமாயிருக்கும் தன்மையையும், மனம் வாக்குக் காயம் மூன்றும் கபடமின்றி ஒத்திருக்கும் தன்மையையும், நல்ல உத்தியோகத்தையும், பெற்றது கொண்டே மகிழும் தன்மையையும், மோட்ச இச்சையையும், இந்திரிய அந்தக்கரணங்களின் அடக்கத்தையும், சகல சீவர்களிடத்தும் இரக்கத்தையும், மிருதுவான உணவை உண்ணுதலையும் உண்டுபண்ணும்.

சிவம் தோன்றின் - பரஞானத்தைப் பெற்ற பொழுதே சிவம் பிரகாசிக்கும், அவ்வாறு சிவம் தோன்றப்பெற்றால், இந்துவின்முன் இருள் ஏகுதல் ஒக்கும் - முழு நிலவொளியின் முன்னே இருளானது கெட்டொழிதலைப் போன்று தேகம் நீங்கியபின்னர் எப்பொழுதும் சிவம் பெறுவர் என்றவாறு.

*நிலவொளியில்லாதவிடத்து இருள் இருப்பது போலப் பெத்தரிடத்தில் மலமிருக்கும் என்க.* (367)

தொந்தத் தசியையவ் வாசியில் தோற்றியே
அந்த முறையீ ரைந்தாக மதித்திட்டு
அந்த மிலாத அவத்தையவ் வாக்கியத்
துந்து முறையிற் சிவமுன்வைத் தோதிடே. 2489

இ-ள்: தொம் தத் அசியை - தொந்தத்தசி என்னும் பதப்பொருளை, வாசியில் தோற்றி - பிராண வாயுவின்கண் தோற்றுவித்து, அந்த முறை ஈர் ஐந்தாக மதித்திட்டு - சீவதுரியம், சீவதுரியாதீதம், பர துரியம் நான்கு, சிவநனவு, சிவகனவு, சிவதுரியம், துரியாதீதம் என்னும் அந்தமுறையில் பத்தாக எண்ணி, அந்தம் இலாத அவத்தை அவ்வாக்கியத்து - முடிவில்லாத அவ்வவத்தையை அவ்வாக்கியத்தில் வைத்து, உந்தும் முறையில், - செலுத்தும் முறையில், சிவம் முன் வைத்து ஓதிடு - சிவத்தை முன்னாக வைத்துச் செபிப்பாயாக எ-று.

சிவமுன்வைத்து என்றது சிவ பர சீவ என்னும் முறையில் வைத்தென்றபடி; உபதேச முறையாலறிக.

"சீவ துரிய முதலாகச் சீரான
ஆவ சிவதுரி யாந்த மவத்தைபத்
தோவும் பராநந்தி யுண்மைக்குள் வைகியே
மேவிய நாலேழ் விடுத்துநின் றானே." (2284)

என்னும் திருமந்திரத்தில் அவத்தை பத்தும் அதன் மேல் உள்ள பதினோராவது அவத்தையும் காண்க. அது சிவதுரியாதீதம்.

சீவ துரியமுதல் சிவதுரியம் ஈறான பத்தவத்தைகளாவன: சீவதுரியம், சீவதுரியாதீதம், பரநனவு, பரகனவு, பரசுழுத்தி, பரதுரியம், பரதுரியாதீதம், சிவநனவு, சிவகனவு, சிவசுழுத்தி என்பன.

பரசாக்கிரம் உலகினை நுகர்தல், அந்நுகர்ச்சியின் உறுதி பரசொப்பனம், அதனை ஞானமயமாக அறிதல் பரசுழுத்தி, உபசாந்தம் முதிர்தல் சுழுத்தியைத்துறந்த பரதுரியமாம். அதனைத் தரித்தவன் சிவதுரியனும் என்பது கருத்தாகக்கொள்க. பரதுரியாதீத அவத்தை பற்றறவே நீங்கச் சிவத்தைப் பற்றுதலாம். பரதுரியம் பிரமரந்திரத்தை இடமாகவுடையது என்பர். அவ்வனுபவமும் காயத்தினளவே. குருவருளால் சீபஞ்சாக்கர உபதேசமும் வரமும் பெற்றுச் சிவன் கூடியபிறகே சிவமாந்தன்மை சித்திக்கும் என்றபடி.

பூரக ரேசகம் செய்யும் காலத்திலே ஹம்ஸ: ஸோஹம் என்று நேராகவும் தலை கீழாகவும் பிரகாசிக்கின்றன. அசபா மந்திரத்தினுல் 'தத்துவமசி' என்னும் மகா வாக்கியத்தில் சொல்லப்பட்டிருக்கிற சீவப் பிரம ஐக்கியம் அடிக்கடி சிந்திக்கப்படுகின்றது. அந்த ஸோஹம் என்னும் அசபா காயத்திரியை ஈசுர நாமம் போலச் செபிப்பதால் நன்மையுண்டாம். குரு உபதேசத்தினுல் இந்த மந்திர செபமானது சுழுமுனையிலே விபரீதமாகவே உண்டாகின்றது. அது ஸோஹம் ஸோஹம் என்று ஆகிறது. சகாரம் கேசரி என்று சொல்லப்படும். அது த்வம் பதம் என நிச்சயிக்கப்படும். அகாரம் பரமேசுவரன் ஆகிறது. அது தத்பதம் என்று நிச்சயிக்கப்படும். சகாரத்தைத் தியானிக்கும் ஆன்மாவும் நிச்சயமாய் அகாரமே ஆகின்ருன். (368)

வைத்துச் சிவத்தை மதிசொரு பானந்தத்
துய்த்துப் பிரணவ மாம்உப தேசத்தை
மெய்த்த இதயத்து விட்டிடு மெய்யுணர்ந்
தத்தற் கடிமை யடைந்துநின் ருனே. 2490

இ-ள்: சிவத்தை வைத்து மதி - சிவம் முன்னுகக் கொண்டு கணிக்க, (மதி) சொரூபானந்தத்து உய்த்து -

ஆன்ம அறிவானது சிவஞானமாக அச் சிவசொரூபத்தின்கண் செல்லும், அவ்வாறு செலுத்திப் பின்பு, பிரணவம் ஆம் உபதேசத்தை - பிரணவமாகிய உபதேசப் பொருளை, மெய்த்த இதயத்து விட்டிடு - மெய்யுணர்வால் தூயதான இதயகமலத்திலே விட்டிருப்பாயாக, (அதன்பின்) மெய் உணர்ந்து - மெய்மையாகிய சிவபரம்பொருளை அறிவுக்கறிவாகவுணர்ந்து, அத்தற்கு அடிமை அடைந்து நின்றான் - அவ்வறிவே பூரணமாய் விளங்கிக் கப்பின்றி அம்முதல்வன் திருவடியைத் தலைப்பட்டு அந்த ஞேயத்தில் அழுந்தி அடங்கி நின்று பிரித்தறியவராது ஆனந்த சொரூபியாய் நிற்பன் அவ்வான்மா என்றவாறு.

*இது நின்மல துரியாதீதநிலை.* *(369)*

தொம்பத மாயையுள் தோன்றிடுந் தற்பதம்
அம்பரை தன்னில் உதிக்கும் அசிபதம்
நம்புறு சாந்தியில் நண்ணுமவ் வாக்கியம்
உம்பர் உரைதொந்தத் தசிவாசி யாமே. 2491

இ - ள்: தொம் பதம் மாயையுள் தோன்றிடும் - தொம்பதப்பொருளாகிய நீ என்னும் உயிர் மாயையிற் கட்டுண்டு கிடக்கும், தற்பதம் - தற்பதப்பொருளாகிய அது என்னும் சிவம், அம்பரை தன்னில் உதிக்கும் - அழகிய பராசத்தியினிடமாகத் தோன்றுவதாம், அசிபதம் - அசிபதப்பொருளாகிய ஆனாய் என்பது, நம்புறு சாந்தியில் நண்ணும் - விரும்பத்தகும் சாந்தியாக ஒடுக்கத்திலே பொருந்துவதாம், அ வாக்கியம் - அத் தத்துவமசி என்னும் வாக்கியமானது, உம்பர் உரை - மேலான மந்திரமாகும், தொம் தத் அசி வாசி ஆம் -

தொம் தத் அசி என்பது இயல்பாகவே வாசியினிடமாகப் பயில்வதாம் என்றவாறு.

மகா வாக்கியம் என்பது பெரும்பெயர்க்கிளவி. அஃது இங்கே தத்துவமசி எனப் பேசப்படுகிறது. தத்துவமசி - அது நீ ஆகின்ருய் என்னும் பொருளை உடையது. தத்துவமசி வாக்கியம் ஓரளவு சீபஞ்சாக்கரப்பொருளையே உணர்த்துவதாம். சிவயநமவென்பது அம்மையப்பர் அருள் அணைப்பிலே ஆன்மா முனைப்பற்று நிற்கும் நிலையை உணர்த்தும். சி - சிவம், வ - அருள், ய - ஆன்மா. "பெரும்பெயரே பெயராக வந்த, ஒரு வாய்மை தன்னை நினையினு முள்ள முருகுவதே" என்றது காண்க.

திருவருளிற்ருேய்ந்து ஆன்மபோதமழிந்து சிவபோத மிக்குச் சிவத்தோடுகூடிச் சிவமாந்தன்மைப் பெருவாழ்வு எய்துதலே மகாவாக்கிய நிலையாம் என்பது கருத்து. (370)

ஆகிய வச்சோயந் தேவதத் தன்னிடத்
தாகிய வைவிட்டாற் காயம் உபாதானம்
ஏகிய தொந்தத் தசியென்ப மெய்யறி
வாகிய சீவன் பரசிவ னுமே. 2492

இ-ள்: ஆகிய அ சோயம் தேவதத்தன் - பொருந்திய அவனே இத்தேவதத்தன் என்னும், இடத்து ஆகியவை விட்டால் - காலம் இடம் முதலாயின நீங்கினுல், காயம் உபாதானம் ஏகிய - உடம்பும் காரணமாயையும் நீங்கிய நிலையில், தொம் தத் அசி என்ப - அம்மூன்று பதங்களும் உணர்த்தும் மெய்ப்பொருள் என்று கூறுவர், மெய்யறிவாகிய சீவன் பரசிவன் ஆம் - (பாசப் பிணிப்புக்கு ஏதுவாகிய அபக்குவம் நீங்கித் திருவருட்

பார்வையினுல் தம்மை அறிதற்குரிய பக்குவமுடைய மலம் நீங்கிய) முத்தன் ஏகதேச அறிவை நீங்கிப் பூரண அறிவைப்பெற்று அந்த ஞேயத்தைப் பொருந்தித் தான் தோன்ருமல் இரண்டறக் கலந்து நிற்பன்; இதுவே சிவபோகமாம்.

சிவபெருமான் திருவருளால் அம்மலசத்தி பற்றறக் களைந்து அடக்கப்பட்டபோது, அந்த அறிவானது சுத்தாவத்தையில் வியாபகமாய் விளங்கிக் கப்பின்றிச் சிவானந்தத்தைத் தலைப்பட்டு அந்தஞேய இன்ப சிவத்தில் அழுந்தும்; இதனையே மெய்யறிவாகிய சீவன் என்ருர். மெய்யறிவு - உண்மைஞானம்; சிவஞானம். சோயம்-இவன் அவனே. உபாதானம்-மாயை, காரண மாயை என்க.

சிவஞானத்தால் முனைப்பின்றி அருள்வழியில் நின்று சிவமே தானெனச் சிவோகம்பாவனை செய்யின் சிவபெருமான் அவ்வான்மாவில் பிரிப்பின்றி அத்துவிதமாகத்தோன்றி நிற்பன் என்க. (371)

தாமத காமிய மாகித் தகுகுண
மாமல மூன்றும் அகார வுகாரத்தோ(டு)
ஆமறு மவ்வுமவ் வாயுடன் மூன்றில்
தாமாந் துரியமுந் தொந்தத் தசியதே. 2493

இ-ள்: தாமதம் ஆகி தகு குணம் ஆம் மூன்றும் - தாமதம் இராசதம் சாத்துவிகம் என்னும் மூன்று குணங்களும், காமியம் ஆகி தகு மலம் மூன்றும் - கன்மம் மாயை ஆணவம் என்று சொல்லப்படும் மூன்று மலங்களும், அகார உகாரத்தோடு மவ்வும் - அகரம் அகங்காரத்தினையும் உகரம் புத்தியினையும் மகரம் மனத்தினையும் செலுத்தும், உடல் மூன்றில்

தாம் ஆம் துரியம் - தூலம் சூக்குமம் காரணம் என்னும் உடம்புகளில் உண்டாகும் துரியநிலை, அவ் வாய் உடல் - அந்த வாயில்களையுடைய உடல், மலகன்மங்களால் கட்டுண்டநிலை பெத்தம், அவற்றின் நீங்கியநிலை முத்திநிலையாம். துரியநிலை ஒடுக்கம், அவற்றைக் கடந்த நிலை துரியாதீதமாம்.

தாமதம் முதலிய குணங்களும் காமியம் முதலிய மலங்களும் தூலவுடம்பும் புரியட்டகவுடம்பும் காரணவுடம்பும் ஆகிய யாவும் தொம் (த்வம்) என்னும் பதப்பொருளாய் நிற்கும் ஆன்மா; ஆன்மா இவற்றைத் தாமாகவே எண்ணி நிற்கும் நிலை. தத் என்றது துரியநிலை, அது பரதுரியமாம். பரதுரியம் மெய்ப்பொருட் காட்சி. பரதுரிய துரியமே சிவதுரியம் எனப்படும். ஆகலின், தத் என்னும் பதப்பொருளாய் நிற்கும் சிவம் அசி என்னும் பதம் ஆனுய், ஆகின்ருய் என்பது ஆன்மா சிவத்தோடு கலத்தற்கு வாயிலாக உள்ளது பரதுரியம் என அறிக என்றவாறு. (372)

## 27. முப்பாழ்

காரிய மேழ்கண் டறுமாயப் பாழ்விடக்
காரண மேழ்கண் டறும்போதப் பாழ்விடக்
காரிய காரண வாதனை கண்டறுஞ்
சீருப சாந்தமுப் பாழ்விடத் தீருமே. 2494

இ - ள்: காரியம் ஏழ் கண்டு அறும் மாயப்பாழ் விட - மாயாகாரியமாகிய உடல், பொறி, மனம், சித்தம், புத்தி, அகங்காரம், பிராணவாயு ஆகியஏழினையும்கண்டு நீங்க; அதனைத் தத்துவஞானத்தால் அறிந்து நீங்க

என்றபடி. காரணம் ஏழ்கண்டு அறும் போதப் பாழ் விட - காரண உபாதியாகிய எல்லாம் அழித்தல், எல்லாம் படைத்தல், எல்லாம் அறிதல், எல்லாவற்றிற்கும் காரணமாதல், எங்கும் வியாபித்திருத்தல், எல்லாம் தானுதல், எல்லாம் காத்தல் என்னும் போதப் பாழினை அருளால் கண்டுநீங்க, காரிய காரண வாதனை கண்டு அறும் சீர் உபசாந்தம் - காரிய காரணங்களாக வுள்ள வாசனைகளைக்கண்டு அதனைவிட்டு நீங்குவதாகிய உபசாந்தமும் ஆகிய எல்லாம், முப்பாழ்விட தீரும் - மூன்று வகைப்பட்ட பாழினையும் கடந்துநிற்க நீங்குவதாம் என்றவாறு.

முப்பாழ் என்றது மாயப்பாழ் சீவப்பாழ் சிவப்பாழ் என்பன. மாயப்பாழ், போதப்பாழ் எனவும் கூறப் படும். போதப்பாழ் தத்துவரூபம் முதலிய மூன்றையும் அறிந்து பாழ்படுத்தி நீங்கல். சீவப்பாழாவது ஆன்ம ரூபம் முதலிய மூன்றையும் அறிந்து நீங்குதல். சிவப் பாழாவது சிவரூபம் முதலிய இரண்டையும் அறிந்து நீங்குதல். இம் முப்பாழும் நீங்க முழுப்பாழ் சித்திக் கும்; முழுப்பாழ் - முத்தி.

காரியோபாதி ஏழும் வருமாறு: திருமந்திரத்தில்,

" உடலிந் தியமன மொண்புத்தி சித்தம்
அடலொன் றகந்தை யறியாமை மன்னிக்
கெடுமவ் வுயிர்மயன் மேலுங் கிளைத்தால்
அடைவது தானேழ் நரகத்து ளாமே."

என்பது (2194) கண்டுகொள்க.

ஈண்டுக்கூறும் ஏழுபாதிகட்கு முள்ள தத்துவங்கள் தேகத்தில் நின்ற தன் மாத்திரையைந்து, பூதம் ஐந்து,

இந்திரியங்களுள் ஞானேந்திரியம் ஐந்து, கன்மேந்திரியம் ஐந்து. அந்தக்கரணம் நான்கும் பிராணவாயு ஒன்றுமாக இருபத்தைந்து தத்துவங்களாம். இவற்றின் மேலாய்நிற்கும் புருடதத்துவம். இப்புருடன் சகலனுகலின் அவித்தையும் கன்மமும் கூடிநின்றபோது பிரளயாகலன் என்றும், அவித்தை மாத்திரம் கூடி நின்றபோது விஞ்ஞானுகலன் என்றும் பெயர் பெறுவன். அதனுல், வித்தியா தத்துவம் சிவதத்துவங்களையும் மாயையுள் அடக்கிப் பிறிதோராற்ருல் "கர்த்தா மேவுபாதியே ெமன்பார்" நிராமய தேவர். அது,

" இந்திய மெல்லாந் தேக மெழுமன மிதனிற் புந்தி
புந்தியிற் பிராணன் மேலாம் போற்றிய பிராணன் தன்
வந்தசங்காத மாயை மேலதாம் வகுத்த வேழும் [னில்
முந்திய வான்மோ பாதி யேழதா மொழியுங் காலே"

எனவரும். இன்னும், நிராமயதேவர் நூலின்கண்,

" தத்துவந் தீர்ந்த பாழுந் தனையறிந் தற்ற பாழும்
உத்தம வுபசாந் தத்......முன்னிய மூன்று பாழும்
தொத்திடு மாயை யோடுந் தொல்பரா சத்தி யோடுஞ்
சித்து......சிவசத்தி......பாற்றிருந்தது திரிதல் காண்டி ..."

" காரிய காரண வுபாதி கைவிட
ஓரியல் பாமுப சாந்த முற்றதே
ஏரிய லுயிர்பர மிரண்டி னைக்யமும்
ஓரியல் பாகிவே றின்றி யென்றதாம்."

(ஞானுவரணவிளக்கம், பக் - 137.)

என வருமாற்ருன் உணர்க.

" காரிய காரணங் காணு முப்பாழ்விடச்
சீரிய தான சிவமென லாமே."

எனவும், நிராமயதேவர் நூலில்,

" ஒழியாவுப சாந்தம தாயுளதுங்
கழியாவிடு காரண காரியமே
மொழியாவகை யாலுல கற்றவிடத்
தழியாவுணர் வேசிவ மாவதுவே."

எனவும் வரும்.

இனி, முப்பத்தாறுதத்துவங்களில் ஆன்மதத்துவம் இருபத்துநான்கும், புருடதத்துவம் ஒன்றும் நீங்கப் பெறுதல் நின்மலசாக்கிரம். வித்தியாதத்துவங்களில் புருடன் நீங்கநின்ற ஏனைய ஆறும் கழலல் நின்மல சாக்கிரத்தில் சொப்பனம். தனித்த சிவதத்துவம் ஐந்தும் கழலல் நின்மலசாக்கிரத்தில் சுழுத்தியாம்.

இங்ஙனம் காரியமான தத்துவங்கள் கழிதல் நின்மல நனவாதி அவத்தை. எனவே காரணமின்மையும் உடன் கருதப்படும். காரணமுங் கழிதலே நின்மல நிலைகள் என்க. 'காரியம் ஒழியவே காரணமின்மையின்' என்பது ஞானாவரண விளக்கம். (373)

மாயப்பாழ் சீவன் வியோமப்பாழ் மன்பரன்
சேயமுப் பாழெனச் சிவசத்தி யிற்சீவன்
ஆய வியாப்த மெனுமுப்பா ழாம்அந்தத்
தூய சொரூபத்திற் சொல்முடி வாகுமே. 2495

இ - ள்: மாயப்பாழ் சீவன் வியோமப்பாழ் - மாயைப்பாழ் சீவப்பாழ் வியோமப்பாழ் என்னும் மூன்றும், மன் பரன் சேய முப்பாழ் என - நிலைபெற்ற சிவத்தினது சேய்மைக்கண் உள்ள முப்பாழ் என்று சொல்லும்படி, சிவசத்தியில் சீவன் ஆய வியாப்தம் எனும் முப்பாழாய் - சிவசத்தியாகிய அருளிலே சீவன் அடங்கி நிற்றல் என்று சொல்லப்படும் மூன்றுபாழாம், அந்த தூய சொரூபத்தில் சொல் முடிவு ஆகும் - அந்த

மூன்று பாழும் தூய சிவசொரூபத்தினிடத்துச் சேய்மையில் உள்ளதாம்; தூய சொரூபம் சொல்லிறந்த முடிவின்கண் உள்ளது என்றவாறு. (374)

எதிரற நாளும் எருதுவந் தேறும்
பதியெனும் நந்தி பதமது கூடக்
கதியெனப் பாழைக் கடந்தந்தக் கற்பனை
உதறிய பாழில் ஒடுங்குகின் றேனே. 2496

இ - ள்: எதிர் அற நாளும் எருது உவந்து ஏறும் பதி எனும் நந்தி - இணையில்லாமல் எப்பொழுதும் இடபவாகனத்திலே மகிழ்ந்து ஏறிச் செலுத்தும் பதிப் பொருள் என்னும் நந்தியினது, பதம் அது கூட - திருவடிகளிலே கூடும்பொருட்டு, கதி என - பற்றுக் கோடு என்று கருதப்படும், பாழைக் கடந்து - மாயைப் பாழ் சீவப்பாழ் சிவப்பாழ் என்னும் முப்பாழ்களையும் கடந்து, அந்தக் கற்பனை உதறிய - அந்தக் கற்பனையை விட்டு நீங்கிய, பாழில் - முழுப்பாழாகிய முத்தியில், ஒடுங்குகின்றேன் - சிவ வியாபகத்தில் வியாப்பியமாக அடங்கியிருந்து சிவபோகத்தைத் துய்க்கின்றேன் என்றவாறு.

மாயைப்பாழ் - தத்துவ ரூபம் தத்துவ தரிசனம் தத்துவசுத்தி; சீவப்பாழ் - ஆன்மரூபம் ஆன்மதரிசனம் ஆன்மசுத்தி; சிவப்பாழ் - சிவரூபம் சிவதரிசனம். பாழைக் கடத்தலாவது அவற்றை அறிந்து நீங்குதல். இது முன்னும் கூறப்பட்டமை காண்க.

வியாபகம் - எங்குமிருப்பது, அதிகதேசவிருத்தி. வியாப்பியம் - நூனதேசவிருத்தி. எதிர் அற - இணையில்லாமல். உதறிய - விலக்கியுள்ள. பாழில் - உருவம் அற்ற இடத்தில். (375)

துரியம் அடங்கிய சொல்லறும் பாழை
அரிய பரம்பரம் என்பர்கள் ஆதர்
அரிய பரம்பரம் என்றே துதிக்கும்
அருநிலம் என்பதை யாரறி வாரே. 2497

இ - ள் : துரியம் அடங்கிய சொல் அறும் பாழை- சுத்த துரியமாகிய நின்மலதுரியமும் அடங்கிய சொல்லு தற்கு முடியாத (முடிவில்லாத வியாத்தியாகிச் சித்தம் செல்லாத சூனியமாய் உள்ள) ஒன்றை, அரிய பரம் பரம் என்பர்கள் ஆதர் - அறிவில்லாதவர்கள் அறிதற்கு அருமையாயுள்ள மேலானவற்றிற்கெல்லாம் மேலா னது என்று (அறிவுடையோர்) கூறுவர், (அப்பாழா னது) அரிய பரம்பரம் என்றே துதிக்கும் - கிட்டுதற் கரிய மிக மேலானது என்று துதிக்கப்படும், அருநிலம் என்பதை அறிவார் யார் - துரியாதீதநிலை அஃது என்பதை அறிகின்றவர் யாவருளர்? மிக மிகச் சிலரே எனக் குறித்தபடி என்றவாறு.

அருநிலம் என்றது அருமையான சிவலோகத்தை. நின்மலாவத்தையில் சிவனும் அவன் அருளுமே அறி யப்படுவன; அன்றி, வேறு அறியப்படுவன இல்லை யாம். நின்மல துரியநிலையில் இருப்பார் சிவத்தை யன்றிச் சிந்தை செய்யார். செயலறுதல் - சிந்தையும் ஒருங்கித் திருவடியிற் பதிதல்.

நம்பியாரூரர் தம் செயலற்று அன்பின் செயலுட் பட்டுத் தாழ்ந்தெழுந்து பஞ்சாக்கர சொரூபராய், பஞ்சகிருத்திய அதிகாரியாய், பந்தம் என்னும் துன் பத்தைத் தலையெடாவண்ணம் மிதித்து முத்தி என்னும் பேரின்பத்தை எடுத்தளிக்கும் தாதாவாய், ஆனந்தத் தாண்டவம் செய்யும் சந்திரசேகரரைக் காணும்போது அந்த ஈசன் பரமானந்த எல்லையின்கண் நின்று

தம்மையே காணும் காட்சிவசப்பட்ட முத்தர்களது பொறி புலன் கரணுதிகளெல்லாம் அக்காட்சியின் வசமாகவே நின்று திளைத்துச் சிவானந்தத்தில் மூழ்கும் வண்ணம் செய்தருளும் பெருங்கூத்தினின்றும் பெருகி வராநின்ற பேரின்ப வெள்ளத்துள் மூழ்கினர். மூழ்கவும் அவ்வின்ப வசப்பட்ட கண்களாலாகிய காட்சியுணர்வு ஒன்றே சத்த பரிச ரூப ரச கந்தமெனப் பெயர் பெற்ற ஐவகையுணர்வையும் கொள்ளைகொண்டது. அஃதேபோல், மனம் புத்தி சித்தம் அகங்காரம் என்னும் கரணங்கள் நான்கும் அக்காட்சியுணர்வின் வழியேசென்று திருவுருவைச் சிந்திக்கச் சித்தம் ஒன்றே ஆயிற்று. அஃதேபோல், அவ்வந்தக்கரணங்களைத் தொழிற்படுத்தும் சாத்துவிகம் இராசதம் தாமதமென்னும் முக்குணங்களும் திருவுருவைச் சிந்தித்த சித்தத்தின் வழியாய் நின்ற சாத்துவிக குணமாகவே ஆயிற்று. ஆகவே, புலன்களாலும் கரணங்களாலும் குணங்களாலும் மாறுபடுதலில்லாத சிவானந்தக் களிப்பினுல் திருவுள்ளம் மலர்ந்திருக்கப் பெற்றுர். இதனைச் சேக்கிழார் சுவாமிகள், "ஐந்துபே ரறிவும் கண்களே கொள்ள அளப்பரும் கரணங்கள் நான்கும், சிந்தையே யாகக் குணமொரு மூன்றும் திருந்துசாத் துவிதமே யாக, இந்துவாழ் சடையான் ஆடு மானந்த எல்லையில் தனிப்பெருங் கூத்தின், வந்த பேரின்ப வெள்ளத்துட் டிளைத்து மாறிலா மகிழ்ச்சியின் மலர்ந்தார்" என்று தடுத்தாட்கொண்ட புராணத்துக் கூறியருளியவாற்றுன் அறிக. (376)

ஆறுறு நீங்க நமவொடி யகன்றிட்டு
வேறு கியபரை யாவென்று மெய்ப்பரன்
ஈருன வாசியிற் கூட்டு மதுவன்றே
தேருச் சிவாய நமவெனத் தேறிலே. 2498

இ - ள்: ஆரூறும் நீங்க - ஆன்மதத்துவம் இருபத்துநான்கு, வித்தியாதத்துவம் ஏழு, சிவ தத்துவம் ஐந்து ஆகிய முப்பத்தாறு தத்துவங்களும் ஆன்மாவை விட்டு நீங்கும்படியாக, நம ஆதி அகன்றிட்டு - ஆதியாகவுள்ள திரோதமாகிய நகாரமும் மல மாகிய மகாரமும் நீங்கி, வேறு ஆகிய பரை - திரோத சத்தியே திருவருட்சத்தியாக மாறிநின்று, யா - யகார மாகிய ஆன்மாவை, என்றும் - எக்காலத்தும், மெய்ப் பரன் ஈறு ஆன வா சியிற் கூட்டும் - உண்மையான வடிவுள்ள சிவத்துக்கு ஈருக அமைந்துள்ள வகார மாகிய சிவசத்தி சிகாரமாகிய சிவத்துடன் இரண்டறக் கூட்டுவிக்கும், தேரு-மலபந்திகளால் தெளியமுடியாத, சிவாயநம என தேறில்-'சிவாயநம' என்னும் திருவைந் தெழுத்தாகிய மந்திரத்தை ஞாருசாரியன் அனுக்கிரகத் தால் பெற்றுத் தெளிந்து அநுபூதி கைவரப்பெற்ருல், அது அன்றே - (கூட்டும்) அம்மந்திரமன்றே மந்திர வாச்சியப் பொருளாகிய சிவத்துடன் ஆன்மாவை இரண்டறக் கலப்பிக்கும் என்றவாறு.

சீபஞ்சாக்கரத்தின் முறைமையாவது: சிவன் அருள் ஆவி திரோதம் மலம் என்னும் ஐந்துமாம், பக்குவப்பட்ட ஆன்மா நகாரம் முதலாக உச்சரிக்கில் அருள் பொருந்தாது. ஆகலின், ஞாருசாரியர் அனுக் கிரகம் பண்ணின முறைமையிலே நின்று சிகாரம் முத லாக உச்சரிக்கில் அருள் பொருந்தும் என்க. அவ் வாறு சிகாரம் முதலாகவுள்ள பஞ்சாக்கரத்தை விதிப் படி இடைவிடாமல் அறிவாற் கணிக்கில் ஆன்மாவுக்கு ஆணவமலமானது நீங்க அருளானது பேரின்ப மாகிய சிவத்திலே பொருந்துவிக்கும் என்றபடி.

ஆதியாகிய நகாரமும் மலமாகிய மகாரமும் ஆகிய இரண்டும் அடியாக உச்சரித்தால் உறுதியாக மும்மலமும் நீங்கி ஆன்மா அருளைப் பொருந்திப் பேரின்ப வாழ்வை அடையமாட்டா. ஆகலின், நகாரம் முதலாக உச்சரிக்கும் முறைமையை மாறிச் சிவம் முன்னாக அத் திருவெழுத்து ஐந்தையும் விதிப்படி உச்சரிக்க ஆன்ம போதத்தால் மதித்தற்கரிதாகிய பேரின்ப வாழ்வில் எய்திவாழலாம். ஆகவே, சிவம் முன்னாகவே கணிக்க என்பது கருத்தாகக் கொள்க.

தத்துவாதீதமாகிய மௌனஞானமா யிருக்கின்ற பரமுத்தி அப்பஞ்சாக்கரத்தால் சித்திக்கும். (377)

உள்ளம் உருவென்றும் உருவம் உளமென்றும்
உள்ள பரிசறிந் தோரு மவர்கட்குப்
பள்ளமும் இல்லைத் திடரில்லைப் பாழில்லை
உள்ளமும் இல்லை யுருவில்லை தானே. 2499

இ - ள் : உள்ளம் உரு என்றும் உருவம் உளம் என்றும் உள்ள பரிசு அறிந்து - உயிரை உடல் என்றும் உடலை உயிர் என்றும் கலப்புற்று நிற்கும்நிலையில் அறியாமையாற் கூறும் கூற்றை நன்கு விசாரித்து அத்தன்மையை உள்ளவாறு அறிந்து, ஒரும் அவர்களுக்கு - ஆராய்ந்து தெளியும் சிவஞானிகளுக்கு, பள்ளமும் இல்லை திடரும் இல்லை - பள்ளம் என்று ஒன்றில்லை மேடு என்றும் ஒன்றில்லை, பாழ் இல்லை உள்ளமும் இல்லை - முப்பாழுமில்லை ஆன்மாவென ஒன்றில்லை, உரு இல்லை தான் ஏ - பிறப்பும் இல்லையாம் என்றவாறு.

உடம்பின் வேருக ஆன்மாவாகிய தான் ஒருவன் உளன் என்பதை அறியாமல் தன் உடலேயே தான் என்று மயங்கியிருந்தான்; உயிராகிய தன்னை எடுத்த உடம்பின் வேருக உணர்த்த உணரும் சித்தாக உணர்ந்தான்; தன்னின் வேருன பரசிவத்தையும் கண்டான்; துரியநிலேயும் ஈசனேடு ஒன்றியிராவிடின் அவன் மீளவும் வினைக்கீடாக வந்து பூமியிற் பிறப்பன்.

இதனை,

"தன்னை யறியா துடலேமுன் ருனென்ருன்
தன்னைமுன் கண்டான் றுரியந் தனைக்கண்டான்
உன்னுந் துரியமு மீசனே டொன்ருக்கால்
பின்னையும் வந்து பிறந்திடுந் தானே."

*(2264)* என்னும் மந்திரத்தில் காண்க.

உயிரை உடம்பென்றும் உடம்பை உயிரென்றும் அறியாமையால் மயங்குவதை,

"மேவிய புன்மயிர்த் தொகையோ அம்மயிர்
பாவிய தோலின் பரப்போ தோலிடைப்
புகவிட்டுப் பொதிந்த புண்ணே புண்ணிடை
ஊறும் உதிரப் புனலோ கூறுசெய்(து)
இடையிடை நிற்கும் எலும்போ எலும்பிடை
முடைகெழு மூளை விழுதோ வழுவழுத்
துள்ளிடை யொழுகும் விழும்போ மெள்ளநின்
றூரும் புழுவின் ஒழுங்கோ நீரிடை
வைத்த மலத்தின் குவையோ வைத்துக்
கட்டிய நரம்பின் கயிருே உடம்பிற்குள்
பிரியா தொறுக்கும் பிணியோ தெரியா
தின்ன தியானென் றறியேன் என்னை
ஏதினும் தேடினன் யாதினுங் காணேன்

எனவும்,

... ... ... ... ... ... ... ...
புண்ணியம் புரக்கும் பொன்னி சூழ்ந்த
திருவிடை மருத பொருவிடைப் பாக
மங்கை பங்க நங்கைநா யகநின்
தெய்வத் திருவருள் கைவந்து கிடைத்தலின்
மாயப் படலங் கீறித் தூய
ஞான நாட்டம் பெற்றபின் யானும்
நின்பெருந் தன்மையும் கண்டேன். காண்டலும்
என்னையுங் கண்டேன் பிறரையும் கண்டேன்
நின்நிலை யனைத்தையும் கண்டேன் என்னை
நின்னைக் காணா மாந்தர்
தன்னையுங் காணாத் தன்மை யோரே ”

எனவும் வரும் திருவிடைமருதூர் மும்மணிக்கோவை நோக்கியுமறிக.

முப்பாழ் முற்றிற்று

---

# பிழையும் திருத்தமும்

| பக்கம் | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|
| 3 | 23 | பராவத்தையில் | சிவாவத்தையில் |
| 7 | 7 | முறை | முறையே |
| 15 | 10 | அசத்தன்று | சத்தன்று |